புதுமலர்: 23
இதழ்: 01
தை - மாசி

ஆசிரியர்:
போதகர் வே.மகாராஜா

# அனல்

01.01.2026

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்:
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

## ஜெயத்தின் ஆண்டு – 2026

*Year of Fulfillment*





(கர்த்தர்)
**அவர்மேல்
நம்பிக்கையாயிரு;
அவரே காரியத்தை
வாய்க்கப்பண்ணுவார்.**

சங்கீதம் 37:5

Trust also in him; and he shall bring it to pass.

Psalms 37:5

**2026**

**சீயோன் தேவாலயப் பிரசுரம்**

*Zion Church Publication*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசனை கொடுத்து வாழ்வோம்

இருள் சூழ்ந்த கணத்தில்
அரண்டிடாது என்னை வழிநடத்தும்
வேதம். பள்ளத்தாக்கின்
வழியும் தனிமையின் வலியும்
பஸ்பமாக்க முயன்றும் லீலி
புஷ்பமாய் தோன்றும் வேதத்தின்
வெளிச்சம், நடத்திடும் உனை
என்றும். தடைகளைக் கடந்து
அருவிகளோடும் கவலைகள்
மறந்து பறவைகள் பாடும்
இடைவெளி மறந்து தேவனைத்
தேடும் இருதயம் வேண்டும்
தினந்தோறும் நாடும். முன்னேற
விடாது சில படிகள் கடந்து கயவன்
கூட்டம், உன்னை வனையாமல்
விடாது பல அடிகள் கடந்தும்
குயவன் திட்டம். நெருக்கும்
மனிதர் முன்பு பெருக்கும்
தேவன் பார்வை எப்போதும் உன்
பக்கம். வேண்டுதலை கேட்பதும்
வேண்டியதைக் கொடுப்பதும்
அவரது சித்தம். இயற்கையின்
வேகமும் இதனால் அழிந்த
போகமும் மீள முடியாத சோகமும்
வாழ்வில் தொடர முடியாது
என்றும். எலியாவின் பசியாற்றிய
காகமும் இஸ்ரவேலரைக் காத்த
மேகமும் நமக்கு உண்டு இன்றும்
அதை நினைவில் வை என்றும்

அலைகள் ஆடும் கடலில்
அலைந்து
திரியாமல் கலங்கரை
விளக்காக
எரியும் வேதம் நோக்கி
உன் படகைத் திருப்பு
செத்த ஈ வாசனை கெடுக்கும்
தேவனுக்காகப் பூத்த பூ வாசனை
கொடுக்கும் முள்ளுகள் குத்தட்டும்
வாடாத பூவாய் எதற்கும் அஞ்சி
ஓடாத பூவாய் வேதத்தில் வேர்
விட்டு புத்தாண்டில் பூத்த புதுப்
பூவாய் வாசனை கெடுத்து வாழாது
வாசனை கொடுத்து வாழ்வோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

01. கவிதை
02. அனலின் குரல்
03. தேவன் தந்த வைரங்கள்
04. கதையும் கற்றதும்
05. நற்செய்திப்பகுதி
06. சிறுவர் வட்டம்
07. குறுக்கெழுத்துப்போட்டி - 129
08. வாலிபர் வளாகம்
09. வினா விடை - 131
10. பெண்கள் பக்கம்
11. அருட்பணியாளர் சரிதை
12. அனலின் புதுவருட வாக்குத்தத்த செய்தி
13. படித்ததில் பிடித்தது
14. பக்தர்கள் பயிலகம்
15. மறைக்க முடியாத தவறு



## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

**எழுத வேண்டிய முகவரி:**

**சீயோன் ஜெபக்குழு,**
**இல 29, 29/1,**
**இராமையாச் செட்டியார் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

**TEL: 0094(0) 21 222 2707 e-mail: jazion@sltnet.lk**

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

பரிசுத்தமும் உண்மையுமுள்ள கர்த்தர் இப் புதிய வருடத்தில் நம்மோடு கூட இருந்து நடத்துவாராக!

கடந்த வருடத்தில் அவர் எம்மைக் கைவிடாது, தம்முடைய உண்மையில் பிசகாமல் நம்மை நடத்தினார். அவருக்கே சகல மகிமையும் உண்டாவதாக.

எப்போதும் தேவனுடைய சித்தத்தை கண்டு அதை நிறைவேற்ற பிரயாசப்படுங்கள். ஏனெனில் அவர் மாறமாட்டார். அவருடைய வார்த்தைகள் மாறாதவைகள். அவர் வார்த்தையில் உண்மையுள்ளவர்.

யோனா தேவனுடைய வார்த்தையை தெளிவாகக் கேட்டவன், ஆனால் அந்த வார்த்தையை நிறைவேற்றும்படி செயற்படவில்லை. (யோனா 1:2-3)

நினிவேக்குப் போய் பிரசங்கிக்க வேண்டியவன் தர்ஷீசுக்குப் போக எண்ணினான். அந்த வேளை ஒரு கப்பலும் தர்ஷீசுக்குப் போக ஆயத்தமாய் நின்றது. "ஆயத்தமாய் இருப்பவை எல்லாம் தேவனுடைய சித்தம் இல்லை" தேவனுடைய வார்த்தையை, தேவனுடைய ஒழுங்கு முறைகளை, தேவன் தன் விருப்பத்தை உன் வாழ்வில் காண்பித்த பிற்பாடு அதை நிறைவேற்றாமல் இன்னொன்றைச் செய்வது தேவனுடைய சித்தத்தை மீறுவதாகும்.

தேவ சித்தத்தைத் தட்டிவிட்டு வாழும் வாழ்க்கை குறுகிய நேர சந்தோஷம். யோனா 1:5 சொல்கிறது: "யோனா அயர்ந்த நித்திரை பண்ணினான்" என்று. இந்த நிலை தொடர தேவன் விடவில்லை. அவர் தன் சித்தத்தை நிறைவேற்றும்படி செயலாற்றினார்.

பிரியமானவர்களே, இப் புதிய வருடத்தில் தேவ சித்தத்தைப் பாருங்கள். அதற்கு ஈடாக எமது யோசனைகள், திட்டங்களை நிறைவேற்றாது, அவர் திருவார்த்தையையும் அவரின் இதய ஏக்கத்தையும் அவருடைய ஒழுங்கையும் நிறைவேற்றுவோமாக.

இப் புதிய ஆண்டில் தேவன் உங்களை நடத்துவாராக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனல்
சஞ்சிகையின்
புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்!




தேவனை விசுவாசித்து,
அவர் கொடுக்கும் சகல
ஆறுதலும், நன்மைகளும்,
ஆசீர்வாதங்களும் பெற்று
குறைவின்றி வாழவும்,
தேவனை அனுதினமும்
தேடி அவரின் வழியில் ஓடி
புதுபெலன் பெற்று
தேவசித்தம் நிறைவேற்றி
வாழ அனலின்
வாழ்த்துக்கள்.

– ஆசிரியர் –

# தேவன் தந்த வைரங்கள்


நன்மை செய்கிறவர்களுக்குத் தீமை செய்வது
அந்தகார வல்லமைக்கு கீழ்ப்பட்டிருக்கிறோம்
என்பதையும்; தீமை செய்கிறவர்களுக்கு
நன்மை செய்வது கிறிஸ்துவின் ஆவியால்
நடத்தப்படுகிறோம் என்பதையும்
அடையாளப்படுத்துகின்றது.

தேவ சித்தம் இல்லாத எத்தனையோ
காரியங்கள் எம் வாழ்வில் அழகாகவும்,
ஆயத்தப்படுத்தப்பட்டும் இருக்கும்,
அவைகள் கை கூடியும் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதையும் கற்றதும்



## குடும்பத்திற்காகவும் வாழுங்கள்!

❒ வை. விமலதாஸ்

ஒரு பெரிய வியாபாரி இருந்தார். அவர் ஆரம்பத்தில் சிறிய ஒரு பெட்டிக் கடையில் ஆரம்பித்து, அதனை சிறிது சிறிதாக வளர்த்து பெரியதொரு வியாபாரியாக மாறி மிகுந்த செல்வந்தரானார். அவரிடம் இருந்த பிரச்சினை என்னவென்றால், யாரையும் நம்பி தனது வியாபாரத்தை ஒப்படைக்கமாட்டார். அவருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அவர் காலை ஏழு மணிக்கு தொழிலுக்காக தனது காரில் ஏறினால் இரவு 12மணிக்குத் தான் வீட்டுக்குத் திரும்புவார். அந்த நாள் முழுவதும் வியாபாரம், கூட்டம், புதிய ஒப்பந்தங்களைச் செய்வது என நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருந்தார்.

வழமையாக இரவு இவர் வீட்டுக்கு வரும் போது இவரது மனைவிதான் வீட்டுக் கதவைத் திறப்பார். அன்றைக்கும் வழக்கம் போல இரவு 12மணிக்கு வீட்டுக்கு வருகின்றார். கதவு திறக்கப்படுகின்றது, ஆனால் கதவைத் திறந்தது அவரது மனைவி அல்ல; மாறாக வீட்டு வேலைக்காரர் தான் கதவைத் திறந்தார். அப்போது அவர் ஆச்சரியத்துடன் வேலைக்காரரைப் பார்த்து, அம்மா எங்கே என்று கேட்டார்.

வேலைக்காரர், ஐயா, இன்று மதியம் அம்மாவுக்கு உடல் நிலை நன்றாக இல்லை, அதனால் அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார்கள். அவர் உடல் இயலாமல் படுத்திருக்கிறார் என்றான். இவர் கோபத்துடன், அப்படியானால் ஏன் எனக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கவில்லை என்று கேட்டார். அதற்கு வேலைக்காரர் இல்லை ஐயா, உங்கள் மூத்த மகன் உங்களுக்கு தொலைபேசி அழைப்பு எடுத்தார். ஆனால் உங்கள் தொலைபேசி இயங்காமல் இருந்தது. அதனால் அவர் தான் அம்மாவை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார் என்றான்.

அப்போது தான் இவருக்கு நினைவு வந்தது, ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காக தொலைபேசியை நிறுத்தி (Off) வைத்து அதனை திரும்ப இயங்கு நிலைக்கு கொண்டுவரவில்லை என்பது. எனவே பதற்றத்துடன் மனைவியின் அறைக்கு ஓடிச் சென்றார். அங்கே மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாக தூங்கிக் கொண்டிருந்தார். மனைவிக்கு அருகில் அமைதியாக இவர் அமர்ந்து, இந்த இருபத்தைந்து வருடங்கள் இவள் எனக்காகவே வாழ்ந்தாள், எனக்காக ஓடி ஓடி உழைத்தாள், ஒத்தாசையாக இருந்தாள். ஆனால் நான் இந்த குடும்பத்தோடு இவ்வளவு நாட்களும் எவ்வளவு நேரத்தைச் செலவிட்டிருக்கிறேன் என்று சிந்தித்தார். ஆனால் பெரிதாக இவர் குடும்பத்தோடு தன்னுடைய நேரத்தைச் செலவிட்டதாக அவருக்கு நினைவு வரவில்லை. எழுந்து பிள்ளைகளின் அறைக்குச் சென்றார், அங்கே அவர்களும் அமைதியாக தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

இவர் வெறுமையான உணர்வுடன் வீட்டு முன் விறாந்தைக்கு வந்தார். இருபத்தைந்து வருடங்களில் குடும்பத்தோடு - மனைவியோடு — பிள்ளைகளோடு குறிப்பிடும்படி நேரத்தை செலவிடவில்லையே, என்ன வாழ்க்கை, தொழில் - வியாபாரம் என்று நாட்களைக் கழித்துவிட்டேனே என்று நினைத்தவர், இனி வியாபாரத்தை பிள்ளைகளிடம் ஒப்படைத்துவிட்டு நானும் மனைவியும் மகிழ்ச்சியாக நாட்களை செலவிடவேண்டும் என்று நினைத்தார்.

நினைத்தவருக்கு அப்போது ஒரு சத்தம் கேட்டது; 'உன்னுடைய வாழ்நாள் முடிந்துவிட்டது', அதற்கு இவர் ஐயோ, இப்போது தான் நான் வாழவேண்டும் என்று நினைத்திருக்கிறேன், எனவே எனக்கு கொஞ்சம் காலத்தை தாருங்கள் நான் குடும்பத்திற்காக வாழ்ந்துவிட்டு வந்துவிடுகிறேன் என்றார். அதற்கு அந்த சத்தம், இல்லை! உன்னுடைய நாள் முடிந்துவிட்டது நீ மரிக்கப்போகிறாய் என்றது. இவர் கேட்டார்; ஒரு வாரமாவது எனக்கு நேரம் கொடுங்கள், இல்லை உனது நேரம் முடிந்துவிட்டது என்று பதில் வந்தது. இப்போது இவர்; தான் சம்பாதித்த அனைத்து சொத்துக்களையும் கொடுக்கின்றேன், எனக்கு ஒரு மணிநேரமாவது தாருங்கள் நான் உறவுகளிடம் பேசிவிட்டு வருகின்றேன் என்றார். அதற்கும் நேரம் இல்லை! என்றே பதில் கிடைத்தது. இப்போது எனக்கு ஒரு நிமிடமாவது தாருங்கள் என்று கேட்டார்: அதற்கு அனுமதி கிடைத்து. உடனே இவர், ஒரு பேப்பர் - பேனா எடுத்து எழுதினார்: 'எல்லோரும் உங்கள் குடும்பத்திற்காக நேரம் ஒதுக்குங்கள்; காலம் இழந்தது இழந்தது தான். நீங்கள் எவ்வளவு சம்பாதித்தாலும் அந்த பணத்தை வைத்து ஒரு மணி நேரம் கூட அதிகமாக வாங்க முடியாது' என்று எழுதி வைத்தார். அப்போது இவரது கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு கண்ணைத் திறந்தார். அங்கே இவரது வேலைக்காரன் நின்றிருந்தான். அப்போது தான் இவருக்கு நினைவு வந்தது தான் கண்டது கனவு என்று.

ஆம் நண்பர்களே, புதிய வருடத்திற்குள் வந்திருக்கிறோம். பார்த்தீர்களா! இந்தக் கதையை, எதை வேண்டுமானாலும் உழைத்துக் கொள்ளுங்கள். ஆனால் உங்களுக்காக ஒரு குடும்பம் காத்திருக்கின்றது என்பதை உணர்ந்து அவர்களுக்காகவும் நேரத்தைச் செலவிடுங்கள். இழந்த நேரம் மறுபடியும் எமக்கு கிடைக்காது. புதிய வருடத்தில் உங்கள் உழைப்பு, வருமானம் என்பவற்றுக்கு அப்பால் உங்கள் குடும்பத்திற்காகவும் கொஞ்சம் நேரம் ஒதுக்குங்கள்.

**மத்தேயு 16:26 மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறவாதவர் சொன்னதை மறவாதீர்!



□ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் அனல் வாசகர்களுக்கு எனது புதுவருட வாழ்த்துக்கள். நற்செய்திப் பகுதியூடாக இந்த வருடத்திலும் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட இயற்கையின் அசாதாரண நிலைமைகளை அறிவோம். பல அழிவுகள், உயிர் சேதங்கள். ஆம்! அனர்த்தத்தில் அகப்பட்ட மக்களுக்காக நாம் ஜெபிப்போம்.

**எபிரெயர் 13:16 அன்றியும் நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்.**

நற்செய்தி பகுதியினூடாக நாம் ஆறுதலடைவது மட்டுமல்ல, நாம் நற்செயல்கள் செய்யவும் கற்றுக் கொள்ள வேண்டுமல்லவா?

இங்கே ஆண்டவர் சொல்கிறார்: **'நன்மை செய்யவும், தான தர்மம் பண்ணவும் மறக்க வேண்டாம்'** என்பதாக. ஆம் ஆண்டவராகிய இயேசு தம்மை நம்புகிற பிள்ளைகளுக்கு எவ்வளவோ நன்மைகளை செய்கிறார், செய்து கொண்டிருக்கிறார். தேவன் செய்தவைகளை நாம் மறக்கவே கூடாது. அதே போல் தேவன் சொன்னவைகளையும் மறக்கலாகாது.

கவனியுங்கள்! பரலோக இராஜ்யத்திற்குள்ளே நாம் பிரவேசிக்க வேண்டுமானால் நாம் இவ்வுலக அசுத்தங்களுக்கு தப்பி சுத்திகரிக்கப்பட்டவர்களாக, இயேசுவின் பிள்ளைகளாக இருக்க வேண்டியது அவசியம். ஆனாலும் கூடவே நாம் இப் பூமியில் உள்ள ஏழை மக்களுக்கு, முடியாதவர்களுக்கு, அந்நியர்களுக்கு, வியாதிஸ்தர்களுக்கு நன்மை செய்ய, தானதர்மம் பண்ண தவறிவிட்டு சுயநலமாக நான் ஒன்று என் குடும்பம் ஒன்று என்பதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கும் கொடுக்காமல் வாழ்ந்தால் எம்மால் பரலோக ராஜ்யத்திற்கு போகவே முடியாமல் போய்விடும்.

பிரியமானவர்களே, இயேசு இந்த பூமியில் வாழ்ந்த போது கூறிய சில உதாரணங்களைப் பார்ப்போம்:

**லூக்கா 16:19-31 (19.) ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப் பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். 20. லாசரு என்னும் பேர்கொண்ட ஒருதரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, 21. அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. 22. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான். 23. பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். 24. அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான். 25. அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங்காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய். 26. அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான். 27. அப்பொழுது அவன்: அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு, 28. நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். 29. ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவி கொடுக்கட்டும் என்றான். 30. அதற்கு அவன்: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான். 31. அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள் என்று சொன்னான் என்றார்.**

இந்த ஐசுவரியவானைப் பாருங்கள். இவன் சரீரத்தைக் கெடுக்கும் எந்தவிதமான பாவங்களைச் செய்த தாக இயேசு கூறவில்லை. விபச்சாரமோ,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலையோ, களவோ, பிழையான வருமானம் பெற்றதாகவோ அப்படி எதுவுமே கூறப்படவில்லை. கூடவே இந்த ஐசுவரியவான் யாரோடும் சண் டையிடவுமில்லை. அந்நிய தெய்வங் களை வணங்கவுமில்லை. ஏனென்றால் ஆபிரகாமைப் பார்த்து தகப்பனே என்று சொல்கிறான். அது போல ஆபிரகாமும் ஐசுவரியவானை மகனே என்றே அழைக்கிறார். இப்படி நல்ல மனிதனாக வாழ்ந்தாலும் இவன் மரித்த பின்பு போன இடம் 'பாதாளம்' என்றே வேதாகமம் சொல்கின்றது.

காரணம்தன்வீட்டின்வாசலருகே கிடந்த தரித்திரனாகிய லாசருவுக்கு ஒரு பிடி ஆகாரம் கொடுக்கவில்லை. விலையேறப்பெற்ற வஸ்திரங்களை தான் அணிந்திருந்தானே தவிர குளிரில் போராடும் தரித்திரன் லாசரு வுக்கு நல்ல உடை கொடுக்கவே யில்லை. இதனாலே தான் அவன் உடம்பில் இருந்த பருக்களை நாய்கள் நக்கியது.

கூடவே லாசருவின் உடல் முழுவதும் வியாதி, பருக்கள் மேனியை மூடியிருந்தது. நாய் வந்து நக்கும் அளவிற்கு மோசமான நிலைமை. லாசருவிற்கு ஏதாகிலும் மருத்துவம் செய்ய, சமாரியனைப் போல அவன் காயங்களை ஆற்ற ஐசுவரியவான் தன்னுடையது எதையுமே இழக்க வில்லை. இதனாலே வேதம் சொல்கிறது: 'ஐசுவரியவான் பாதாளத்திலே தள்ளப் பட்டான். மாறாக அவனது மேசையி லிருந்து விழுந்த துணிக்கைகளை சாப்பிட்டவன் பரலோகம் துணிமணி களோடு. (பணம்) இருந்தவன் பாதாளம் போகும் நிலைமை உண்டாகியது.

ஆம் பிரியமானவர்களே, நாம் பூமியில் வாழும் போது நன்மை செய்ய மறக்கவே கூடாது. வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பது நல்லது. வாங்குவதற்கு வாழாமல் கொடுக்கிற வர்களாக வாழுவோம்.

இயேசு சொன்னார்: 'உங்களுக் குள்ளவைகளில் விற்று பிச்சை கொடுங்கள்' என்பதாக. ஆம், நாம் ஐசுவரியவான்களாகும்படியாக அவர் (இயேசு) தரித்திரரானார் என்பதாக பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார். ஆம் கொடுப்ப தும் ஓர் ஆராதனை என்பதனை மறந்து போகாதீர்கள். துதிப்பதைப் பார்க்கிலும் கொடுப்பது மேல்.

இயேசு சொன்னார்: கண் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராதவன் கண் காணாத தேவனிடத் தில் எப்படி அன்பு கூருவான். ஆம் இந்த பூமியில் நாம் ஒன்றும் கொண்டுவந்தது மில்லை, கொண்டு போவதுமில்லை. நம்மிடம் இருப்பதை மற்றவர்களுடன் பகிர்ந்து வாழ்வோம். காக்கைகளை கவனித்துப் பாருங்கள், அவைகள் எப்படி எல்லோரையும் அழைத்து ஒன்றாக நின்று சாப்பிடுகிறது என்பதை.

அதற்காகத்தான் நாம் தான தர்மத்தையும் மற்றவர்களுக்கு நன்மை யையும் செய்துவிட்டு வாழ்க்கையில் மிகுதியான பக்கங்களை தவறாக பாவத்தில் வாழலாம் என்பதல்ல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முடைய அசுத்தங்களை, பாவங் களை எம்முடைய தானதர்மத்தாலும், புண்ணியத்தாலும், மற்றவர்களுக்கு செய்யும் நன்மையினாலும் நிவிர்த்தி செய்யவே முடியாது.

**மத்தேயு 25:31-46 (31.) அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். 32. அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளை யும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து, 33. செம்மறி யாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்தி லும் நிறுத்துவார். 34. அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர் களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக் காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங் கள். 35. பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந் தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; 36. வஸ்திர மில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலி லிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார். 37. அப்பொழுது, நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக்கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? 38. எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக்கொண் டோம்? எப்பொழுது உம்மை வஸ்திர மில்லாதவராகக் கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்? 39. எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலி லிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். 40. அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறிய வராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர் களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். 41. அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப் பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். 42. பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத் தைத் தீர்க்கவில்லை; 43. அந்நியனா யிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை; வஸ்திரமில்லாதிருந் தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங்கொடுக்க வில்லை; வியாதியுள்ளவனாயும் காவலி லடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லை யென்பார். 44. அப்பொழுது, அவர்களும் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, உம்மைப் பசியுள்ளவராகவும், தாகமுள்ள வராகவும், அந்நியராகவும், வஸ்திரமில்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லாதவராகவும், வியாதிப்பட்டவரா கவும், காவலிலடைக்கப்பட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு, உமக்கு உதவிசெய்யாதிருந்தோம் என்பார்கள். 45. அப்பொழுது அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவர்களா கிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகி றேன் என்பார். 46. அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்.**

இங்கே மனுஷகுமாரன் இயேசு மறுபடியும் பூமியை நியாயம் தீர்க்க வரும்போது ஜனங்களை இரண்டு பகுதியாக பிரிக்கின்றார். வலது பக்கம் செம்மறியாடு போன்ற மக்கள் கூட்டம். இடது பக்கம் வெள்ளாடு போன்ற மக்கள் கூட்டம்.

செம்மறியாட்டு கூட்டமான வலது பக்க ஜனங்களை பார்த்து இயேசு சொல்கிறார்: என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற வாக்குத்தத்தத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்று. காரணம்: பசியாயிருந்தேன் உணவு தந்தீர்கள், தாகமாயிருந்தேன் தாகத்தை தீர்த்தீர்கள், வஸ்திரமில்லாதிருந்தேன் வஸ்திரம் தந்தீர்கள் என்று பல நன்மைகளை அடுக்கி சிறியவருக்கு நீங்கள் செய்த தெல்லாம் அது எனக்கே என்று கூறுகின் றார். ஆம்! பரலோக ராஜ்ஜியம் சிறியவருக்கு நன்மை செய்பவர் களுக்கு மட்டுமே.

ஐசுவரியமான வாலிபனைப் பார்த்து இயேசு சொன்னார்: 'நீ நித்திய ஜீவனை சுதந்தரிக்க விரும்பினால் உனக்குண்டானவைகளையெல்லாம் விற்று தரித்திரருக்கு கொடு என்பதே.

ஆம்! புதிய ஏற்பாட்டு ஆரம்ப சபையைப் பாருங்கள். பரிசுத்த ஆவி சபையில் வந்தவுடன் அவர்கள் தன்னு டையது என்று சொல்லி எதையும் சுயநலமாக வைத்திருக்கவில்லை. எல்லாவற்றையும் பொதுவாக அனுப வித்தார்கள். மக்கள் எல்லாவற்றையும் விற்று சமமாக உள்ளவன் இல்லாதவன் எல்லாரும் சமமாக வாழ்ந்தார்கள்.

பிரியமானவர்களே, நாமும் நம்மிடம் உள்ளவைகளை மற்றவர்க ளோடு பகிர்ந்து, இல்லாதவர்களுக்கும் கொடுத்து சமமாக வாழ்வோம். என்னிடம் நிறைய இருந்தால் நானும் கொடுப் பேன் என்பதாக மட்டும் சொல்லாதீர் கள். இயேசு பத்து உள்ளவன் ஒன்றைக் கொடுக்கும்படி சொல்லவில்லை. இரண்டு அங்கியுள்ளவன் ஒன்றை இல்லாதவனுக்கு கொடுக்கக்கடவன் என்றே கூறினான்.

பிரியமான சகோதரனே, சகோதரியே நீங்களும் உங்களுடைய வாழ்க்கையிலே நன்மையும் மேன்மை யுமானவைகளை கண்டடைய விரும்பு கிறீர்களா? இன்றே உங்கள் வருமானத் திற்குள் ஒரு பகுதியை இல்லாதவர்களுக் கும் இயலாதவர்களுக்கும் தேவையுள்ள வர்களுக்கும் ஒதுக்கி நன்மை செய்யுங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். தேவன் தருவார், ஆசீர்வதிப்பார் என்ற எண்ணமும் அற்றவர்களாக கொடுங்கள். உங்கள் பலன் மிகுதியாக இருக்கும்.

வெள்ளாட்டுக் கூட்டமாகிய இடது பக்க ஜனங்களைப் பார்த்து இயேசு சொன்னார்: 'சபிக்கப்பட்டவர் களே, பிசாசும் அவன் தூதர்களுக்கும் ஆயத்தம்பண்ணப்பட்ட நித்திய அக்கினிக்கும் போங்கள்' என்பதாக கூறுகின்றார்.

காரணம்: இந்த பூமியில் தம் அருகே வாழ்ந்த சிறியருக்கு ஒரு நன்மையும், உதவியும் செய்யாமல் வாழ்ந்ததே காரணம் என இயேசு கூறினார்.

அன்பான மக்களே, நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்: நாம் எவ்வளவு பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்தாலும் சிறியருக்கு நன்மை செய்யாமல் போனால் நாம் போகும் இடம் நரகமே.

மேலே சொன்ன இந்த சம்பவங் களை நன்றாக வாசித்திருப்பீர்கள். ராஜாவாகிய தேவன் தம் மக்களிடம் குறைவாக கூறிய பகுதி நித்திய ஜீவனை அடைவதற்கு தடையாக காண்பித்தது. ஆம், நாமும் நற்செயல் செய்து பரிசுத்தத்தைக் காத்துக் கொண்டு இயேசுவுக்காக பிறர் மத்தியில் வாழ்வோம். தேவன் நிச்சயம் உங்களை இந்த புதிய ஆண்டில் ஆசீர்வதிப்பார். இது உண்மை.

**மத்தேயு 19:27-30 (27.) அப்பொழுது, பேதுரு அவரை நோக்கி: இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றான். 28. அதற்கு இயேசு: மறுஜென்ம காலத் திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமை யுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக் கும் போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிற வர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங் களின் மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகி றேன். 29. என் நாமத்தினிமித்தம் வீட்டை யாவது, சகோதரரையாவது, சகோதரி களையாவது, தகப்பனையாவது, தாயை யாவது, மனைவியையாவது, பிள்ளை களையாவது, நிலங்களையாவது விட்ட வன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந் தரித்துக்கொள்ளுவான்; 30. ஆகிலும், முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள் என்றார்.**

கொடுப்பவர்கள் மட்டுமே இந்தப் பூமியில் நூறத்தனையாய் எல்லாவற்றையும் அடைவார்கள். இறுதியில் நித்திய ஜீவனையும் சுதந்தரிப் பார்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனம் பண்ணு; கனம் பெறுவாய்!



❑ ஜசிந்தா அக்கா




அன்பான செல்லப் பிள்ளைகளே, உங்களுக்கு இயேசுவின் இனிய நாமத்தில் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

சென்ற ஆண்டு முழுவதும் இயேசப்பா உங்களோடு இருந்ததற்காய் அவருக்கு நன்றி சொல்லுகின்றேன். ஆனால் நீங்கள் இயேசுவிற்குப் பிரியமான பிள்ளைகளாக இருந்தீர்களா?

பார்ப்போம்...

பாட்டியம்மா வீட்டிற்கு ஒன்பது வயதான அவளது பேரப்பிள்ளை ஜேக்கப் வந்து போவான். அவ் வேளையில் மிகவும் சுவையான தின்பண்டங்களை பாட்டி சாப்பிடக் கொடுப்பாள். அத்தோடு சில அறிவுரைகளையும் கூறுவாள். ஜேக்கப்புக்கோ தின்பண்டங்கள் மிகவும் பிரியமாய் இருந்தது. ஆனால் அறிவுரைகளோ, மிகவும் கசப்பாயும் விசனமாயும் இருந்தது. 'எனக்கு ஒன்பது வயதாகிவிட்டதே, என் வாழ்க்கையில் கவனமாக நடக்க எனக்குத் தெரியுமே' என்று தன் மனதிற்குள் பேசிக் கொண்டான். ஆனால் ஒழுக்கங்களை கடைப்பிடிக்கமாட்டான்.

பாட்டியம்மா வயதானவளானாலும் சுத்தம், ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பாள். சமையலறைப் பொருட்களை ஒழுங்காக வைப்பாள். உடைகளை மடித்து அதற்கான இடத்தில் வைப்பதிலும், கழிவுப் பொருட்களை அதற்கான கூடையில் போடுவதிலும் கவனமாக இருப்பாள். தனது வீட்டையும் சுற்றாடலையும் சுத்தமாய் வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைவாள். ஆனால் சில வேளையில் ஜேக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்காலியை இழுத்துச் சென்று வெளியே இருந்து புத்தகம் வாசிப்பான். அதை அப்படியே விட்டுவிடுவான்.

ஒழுங்கும், சுத்தமும் விரும்பும் பாட்டியம்மாவிற்கு பொருட்கள் அங்கும் இங்குமாக சிதறியிருப்பது பிடிக்காது. பாட்டியம்மா அன்பினால் அவனைக் கடிந்து கொண்டாள். ஆனால் அது ஜேக்கப்பிற்கு அதிக கோபத்தை ஏற்படுத்தியது. கோபம் நிறைந்தவனாய் 'பாட்டிக்கு ஒரு பாடம் படிப்பிக்கத்தான் வேண்டும்' என்று தனது மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

அடுத்த தடவை 'செல்ல ஜேக்கப், கீழே போட்ட பேப்பரை எடுத்துக் குப்பைத் தொட்டிக்குள் போட்டுவிடுங்கோ, நாற்காலியை இருந்த இடத்தில் வையுங்கோ' என்றதும் ஜேக்கப் சட்டென்று 'நான் என்ன வேலைக்காரனா? அது என் வேலை அல்ல' என்றான். திடுக்கிட்ட பாட்டியம்மா தானாகவே கழிவுப் பேப்பரைக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு நாற்காலியை எடுத்து இருந்த இடத்தில் வைத்து பின் அமைதியாக மற்றய வேலைகளைச் செய்தாள்.

அடுத்த நாள் ஜேக்கப் பாடசாலையிலிருந்து பசி வயிற்றைக் கிள்ள பாட்டியம்மா வீட்டிற்கு விரைந்து வந்தான். கோழிக்கறி வாசனை மூக்கைத் துளைத்தது. வழமை போல கோழிக்கறியோடு பாட்டி சாப்பாடு பரிமாறுவாள் என்று எதிர்பார்த்தான். ஆனால் அவளோ அவனை அன்போடு வரவேற்றுவிட்டு தன் வேலைகளைப் பார்த்தாள். ஜேக்கப் தயக்கத்தோடு 'பாட்டியம்மா, சாப்பிட ஏதாவது தருகிறீர்களா?' என்றான். 'அது என் வேலையல்ல, நானென்ன வேலைக்காரியா?' என்று சட்டென பதில் ஜேக்கப்பின் காதைக் கிளித்துக் கொண்டு வந்தது. பாட்டியம்மாவோ மிகவும் அலுவலாக இருந்தாள்.

சற்று நேரத்தின் பின் மெதுவாக பாட்டியம்மாவிடம் சென்று 'பாட்டியம்மா தயவாய் மன்னியுங்கோ, இனிமேல் கீழ்ப்படிவேன்' என்றான் ஜேக்கப். பாட்டியம்மா அவனைக் கட்டி அணைத்து முத்தமிட்டு சுடச்சுடக் கோழிக் கறியுடன் சாப்பாடு பரிமாறினாள். ஒரு வீட்டில் எல்லோரும் வேலைக்காரன் தான். எல்லோரும் தாங்கள் தங்கள் வேலையைச் செய்ய வேண்டும் என்று பாட்டியம்மா விளக்கிச் சொன்னாள். ஜேக்கப் விளங்கிக் கொண்டான்.

பிள்ளைகளே, உங்கள் வீட்டில் இருக்கும் மூத்தவர்களையும், வயோதிபர்களையும் கனம்பண்ண மறக்க வேண்டாம். இது இயேசப்பாவின் கட்டளை.

இந்தப் புதிய ஆண்டில்...

**ரோமர் 12:2b உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | x | | | 02 | 03 |
| | 04 | | | | x | | | |
| 05 | | x | x | | | | | |
| | | 07 | x | | | 06 | x | |
| x | | | | 08 | 09 | | | |
| | 10 | | | | | | | x |
| | x | x | | | | | 11 | |
| | 12 | | | | | | x | |
| 14 | | | x | | | | | 13 |

## குறுக்கெழுத்துப் போட்டி 129

### இடமிருந்து வலமாக

01. 'காரிருளிலே வாசம் பண்ணுவேன் என்று கர்த்தர் சொன்னார்' எனக் கூறியவன்
04. 'நான் சிறுவயது முதல் கர்த்தருக்கு பயந்து நடக்கிறவன்' எனக் கூறியவன்
05. 'உனக்குப் பரிபூரண நன்மை உண்டாகக் கட்டளையிடுவார்' என்றவர்
09. கர்த்தருடைய ஜனங்களை அகந்தையாய் நடத்தியவன்
10. இதன் அர்த்தம் 'நீதியின் ராஜா' என்பதாகும்
12. அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது.................
14. சாலொமோன் கொடுத்த பட்டணங்களில் இவன் பிரியப்படவில்லை

### வலமிருந்து இடமாக

03. தன் ராஜ்யத்திலுள்ள ஒவ்வொரு பட்டணத்திலும் நியாயாதிபதிகளை ஏற்படுத்தின ராஜா
07. கர்த்தர் லேவியின் கோலின் மீது இவன் பெயரை எழுதச் சொன்னார்
08. இவன் இல்க்கியாவின் குமாரன்
11. துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான்; அவன் ............ கர்த்தரை நம்பித் திடனாயிருக்கும்
13. காலேப்பின் மகளாகிய அக்சாளை விவாகம் பண்ணியவன்

### மேலிருந்து கீழாக

01. 'தாவீதின் சிங்காசனத்தைப் பார்க்கிலும் இவன் சிங்காசனத்தைக் கர்த்தர் பெரிதாக்குவார் என்று பெனாயா கூறினான்
02. 'இன்று கர்த்தர் இஸ்ரவேலுக்கு இரட்சிப்பை அருளினார்' என்று கூறியவன்
03. தேனைச் சாப்பிட்டதினால் இவன் கண்கள் தெளிவடைந்தது

### கீழிருந்து மேலாக


06. இவன் மறுபெயர் யுஸ்து
08. 'கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது' என்று கூறியவன்
09. பாகாலுடைய மேடுகளில் ஏறிய ராஜா
13. யோவாசின் ஊராகிய இந்த ஊரில், கர்த்தருடைய தூதன் கர்வாலி மரத்தின் கீழே உட்கார்ந்தார்
14. 'கர்த்தருடைய ஜீவனையும் ராஜாவாகிய என் ஆண்டவனுடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன்' என ஆணையிட்டவன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.

மத்தேயு 5:4



❒ போதகர் வை.தேவதாஸ்




கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே, உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

இப் புதிய ஆண்டிலும் தேவன் உங்களை நினைத்தருளி ஆசீர்வதிப்பாராக. அவருடைய கருணை உங்களுக்கு கிடைப்பதாக.

புதிய வருடம் பிறக்கப்போகின்றது என்பதனை நினைக்கும் போது எமது உதட்டில் புன்னகையும் இருதயத்தில் மகிழ்ச்சியும் ததும்புகின்றது அல்லவா? குறிப்பாக தேவாலயத்தில் தேவ பிள்ளைகளுடன் ஒன்று கூடி சரியாக புத்தாண்டின் ஆரம்ப நாளில் ஆரம்ப மணி வேளையில் போதகரின் அல்லேலூயா! சத்தத்தைக் கேட்ட நாமும் முதல் வார்த்தையாக அல்லேலூயா! சொல்லி தேவனைத் துதிப்பது எவ்வளவு மகிமையான அனுபவம்! தேவனைத் துதித்த பின்பு ஒருவருக்கொருவர் வாழ்த்துக்கள் பரிமாறி கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு புதுபெலன் அடைந்து நம்பிக்கையுடன் இந்த ஆண்டை ஆரம்பித்துள்ளோம்.

புதிதாக கட்டப்பட்ட வீட்டில் குடியேறும் போது எமக்கு எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகிறது. அல்லது எமக்கென்றொரு வாகனத்தை புதிதாக கொள்வனவு செய்யும் போது ஓர் கிளர்ச்சி நமக்குள் உண்டாகிறது. ஏன் ஒரு புதிய ஆடையை முதன் முதலாக அணியும் போது நாம் ஒருவித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்துணர்வுக்குள் செல்கிறோம். அது போலவே இந்த 2026ஆம் ஆண்டின் தொடக்கமும் எமக்குள் பலவிதமான எண்ண அலைகளை உண்டாக்குகிறது. அது எம்மை கர்த்தருக்குள் தைரியப்படுத்தட்டும். இன்னும் நாங்கள் எழும்பிப் பிரகாசிக்க பெலன் கொடுக்கட்டும்.

மறுபக்கம் சிலர் இப் புதிய ஆண்டிலும் புத்தாண்டுக்கான முதலாவது திரைப்படத்தைப் பார்ப்பதற்கு ஆவலாக இருப்பார்கள். சிலர் நண்பர்களுடன் Fun எடுத்துக் கொண்டிருப்பார்கள். இன்னும் சிலர் கடற்கரையோரங்களில் நடனக் கொண்டாட்டங்களிலும், கேளிக்கைகளிலும் பொழுதை போக்கிக் கொண்டிருப் பார்கள். அது போகட்டும்...

இந்தப் புதிய ஆண்டிலும் அனல் சஞ்சிகை மூலமாக உங்களோடு கூட தேவ வார்த்தையை பகிர்ந்து கொள்வதன் மூலம் சந்தோஷம் அடைகின்றேன். வேதாகமத்தில் மிகவும் கருத்தாளம் நிறைந்த ஓர் பகுதியில் இருந்து தேவ செய்தியை பகிர்ந்து கொள்கின்றேன். இவ் வேதாகம வசனங்களானது 'திருவருட் பேறு வசனங்கள்' அதாவது 'பாக்கிய வசனங்கள்' என அழைக்கப்படுகின்றது.

**மத்தேயு 5:4 துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.**

இந்த வேதாகம வசனத்தை இப் புதிய ஆண்டிலும் முதலாவது பிரசங்க வார்த்தையாக உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். கவனியுங்கள், இவ் வசனத்தின்படி பார்க்கப்போனால் இந்த ஆண்டு முழுவதும் நீங்கள் ஒரு போதும் சிரிக்கவோ அல்லது மகிழ்ச்சியாகவோ இருக்கக்கூடாது என்பது இதன் அர்த்தமல்ல. நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என பல இடங்களில் தேவன் கூறுகின்றார்.

இவ் வசனத்தில் 'துயரம்' என்கிற பதம் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் வார்த்தையானது கிரேக்க மொழியில் கடுமையானதும், ஆழ்ந்ததுமான துக்கத்தை விவரிக்கும் வலிமையான வார்த்தையாகும். இதனை இன்னும் உங்களுக்கு விவரிக்க வேண்டுமெனில் இயேசு கிறிஸ்து மரித்த பொழுது அவர்களின் சீடர்கள் அடைந்த துக்கத்தை விவரிக்கும் இத் 'துயரம்' எனும் பதமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

**மாற்கு 16:10 அவளிடத்திலிருந்து அவர் ஏழு பிசாசுகளைத் துரத்தியி ருந்தார். அவள் புறப்பட்டு, அவரோடேகூட இருந்தவர்கள் துக்கப்பட்டு அழுது கொண்டிருக்கையில், அவர்களிடத்தில் போய், அந்தச் செய்தியை அறிவித்தாள்.**

எனவே துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் எனும் பகுதியானது மென்மைத் தன்மை கொண்ட வசனம் அல்ல என்பது தெளிவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு **'துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் ஆறுதலடைவார்கள்'** எனும் வசனமானது எந்தக் காலத்தில் எழுதப்பட்டுள்ளது என்பதனைக் கவனிப்போமானால் அது நிகழ் காலத்தில் எழுதப்பட்ட தேவ வசனமாகும். ஆகையினால் துயரத்தில் தொடர்ந்து இருப்பவர்கள் பாக்கிய வான்கள் என்றும் சொல்ல முடியும். இப்படியான வசன அழைப்பினை சற்று சிந்தித்துப்பாருங்கள்.

நமது வாழ்வின் பயணத்தில் நாம் சந்திக்கும் ஒரு முரடான அனுபவங் களால் நமக்கு உண்டாகும் துயரத்தை இவ் வசனம் குறிப்பிடவில்லை. அல்லது நாம் எதிர்பார்த்தது, விரும்பியது கிடைக்காத போது வரும் துயரமும் அல்ல. ஏன் நமக்கு வேண்டியவர்கள் மரிப்பதனால் வரும் துன்பத்தையும் இது குறிப்பிடவில்லை. 'துயரம்' எனும் போது பாடு நிறைந்த வாழ்க்கை என்றே நாம் தவறாகப் புரிந்து கொள்கின்றோம். எப்பொழுதும் எமது முகத்தை தொங்கப்போட்டுக் கொண்டு மகிழ்ச்சி அற்றவர்களாக அலைவதனை இவ் வசனம் குறிப்பிடவில்லை. அப்படியானால் இவ் வசனத்தின் உண்மை அர்த்தம் என்ன? இந்த ஆண்டிலும் இவ் வார்த்தை மூலம் தேவன் எதனை எதிர்பார்க்கின்றார் என்பதனைப் பார்ப்போம் வாருங்கள்:

'துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்' அதாவது 'வருந்தி அழுபவர்கள் பாக்கியவான்கள்' இது எமது வாழ்வில் பல காரியங்களைக் குறித்து நின்றாலும் குறிப்பாக இவ் வசனம் உணர்த்தும் இரு காரியங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். ஜெபத்துடன் தியானியுங்கள்.

## 01. தனது பாவங்களுக்காக மனமுடைந்து கர்த்தர் இயேசுவிடம் மன்னிப்புக்காக கதறுகிறவர்கள் பாக்கியவான்கள்

'பாவம் எப்பொழுதுமே கண்ணீரை வர வைக்கும்' என்பது ஓர் தேவ மனிதர் கூறியுள்ள கூற்றாகும். நாம் செய்யும் பாவத்தைக் குறித்து சற்று புரிந்து கொள்ள வேண்டும். நமது ஆவிக்குரிய வறுமையை நினைத்து இதற்கு காரணமான பாவ வாழ்வை மன்னித்து எம்மை பரிசுத்தப்படுத்தும்படி தேவனிடம் மன்றாடுவதனை ஆண்டவர் எதிர்பார்க்கின்றார். நமது பாவங்களுக்காக, துக்கம் கொள்ளும் மனநிலையை இது காணப்பிக்கின்றது.

**யாக்கோபு 4:8-9 (8.) தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள். 9. நீங்கள் துயரப்பட்டுத் துக்கித்து அழுங்கள்; உங்கள் நகைப்பு துக்கிப்பாகவும், உங்கள் சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறக்கடவது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைப்பிரசங்கத்தில் காணப்படும் 'துயரம்' எனும் பதத்திற்கு கொடுக்கப் பட்டுள்ள கிரேக்க வார்த்தையே இங்கும் கொடுக்கப்பட்டுள்ளது. உடனடியாகவே துக்கித்து, சஞ்சலப்பட்டு, அழுது மனந்திரும்புங்கள் என யாக்கோபு சொல்கின்றார்.

தங்களுடைய பாவ நிலையைக் குறித்து துயரப்பட்ட இருவரை இங்கு பதிவிட விரும்புகின்றேன்.

## 1. பேதுரு

பேதுரு செய்கின்ற பாவத்தை கவனியுங்கள். அதாவது 'இயேசுவையே அறியேன்' எனக்கூறி பாவம் செய்கின்றார்.

**மாற்கு 14:68 அதற்கு அவன்: நான் அறியேன்.** இரண்டாவது தடவை 'ஆணையிட்டு இயேசுவை மறுதலிக்கின்றார்: **மத்தேயு 26:72 அவனோ: அந்த மனுஷனை நான் அறியேன் என்று ஆணையிட்டு, மறுபடியும் மறுதலித்தான்.** மூன்றாவது தடவை 'இயேசுவை சபித்து சத்தியம் பண்ணினான்' **மாற்கு 14:71 அதற்கு அவன்: நீங்கள் சொல்லுகிற மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான்.** படிப்படியாக பேதுருவின் பாவமானது பின்மாற்றத்திற்குள் கொண்டு போவதனைப் பார்க்கின்றோம். அது போகப்போக மோசமான நிலைக்கே அவரைக் கொண்டு சென்றது.

இக் காலத்தில் நாம் இயேசுவோடு கூட எப்படி நடக்கின்றோம் என்பதனை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எமது பின்மாற்ற நிலையானது தொடர்ந்தும் எம்மை அதிக பாவங்களுக்கூடேயே நடத்திக் கொண்டு செல்கின்றது.

சேவல் இரண்டாவது தடவை கூவிய போது இயேசு சொன்ன வார்த்தை களை பேதுரு நினைவுகூர்ந்தார். மேலும் இயேசுவும் கூட பேதுருவைத் திரும்பி பார்த்தார். அப்பொழுது பேதுரு எப்படி தன் பாவங்களிற்காக மன்னிப்புக் கேட்டார் என்பதனை பின்வரும் வசனங்களில் பாருங்கள்.

**லூக்கா 22:61-62 (61.) அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப்பார்த்தார். சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவுகூர்ந்து, 62. வெளியே போய், மனங்கசந்து அழுதான்.**

மனங்கசந்து அழுது ஜெபித்து தேவனை கிட்டிச் சேருகின்றார். பேதுருவின் துயரமானது அவரை இன்னும் இயேசுவண்டை கொண்டு வந்தது.

நமது பாவகுணங்களாகிய பெருமை, சுயநலம், உயர்ந்த பதவிகளை எதிர்நோக்குதல், பிறரின் பாராட்டுக்களை பெறுவதற்கான முயற்சிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரமல்லாமல் மற்றவர்களை வார்த்தைகளால் காயப்படுத்துதல், இச்சைகள், கட்டுக்கடங்காத கோப வெறிகள் இன்னும் எத்தனையோ பாவ செயல்களைக் குறித்து நாம் எப்போது கடைசியாக வருத்தப்பட்டோம்? எமது அன்பான, பரிசுத்தமான தேவனை துக்கப்படுத்தியதற்காக, அவருடைய வார்த்தைகளை மீறியதற்காக நாம் கடைசியாக எப்பொழுது கடுமையான வலியை உணர்ந்தோம்? நாம் செய்த பாவங்களுக்காக கடைசியாக கண்ணீர் சிந்தியது எப்போது?

## 2. யூதாஸ்

**மத்தேயு 27:3-5 (3.) அப்பொழுது, அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டுவந்து: 4. குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்த தினால் பாவஞ்செய்தேன் என்றான். அதற்கு அவர்கள்: எங்களுக்கென்ன, அது உன்பாடு என்றார்கள். 5. அப்பொழுது, அவன் அந்த வெள்ளிக்காசைத் தேவால யத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நான்றுகொண்டு செத்தான்.**

கவனியுங்கள்: பேதுருவும் பாவம் செய்தார்; யூதாசும் பாவம் செய்தார். பாவம் எல்லாம் ஒன்று தான். சிறிய பாவம், பெரிய பாவம் என்று அல்ல. எல்லாம் பாவமே இருவரும் தம் பாவங்களுக்காக துயரப்பட்டனர், மனஸ்தாபப்பட்டனர்.

இயேசுவை மறுதலித்த பேதுரு துக்கப்பட்ட பிற்பாடு இயேசுவின் சீடர்களுடன் இணைந்து கொண்டார். யூதாஸோ எதிர்மாறாக தன்னைத் தானே மாய்த்துக் கொண்டார். பேதுருவின் துக்கம் அவரை இயேசுவண்டை கொண்டு வந்தது. ஆனால் யூதாசின் துக்கமோ அவரை இயேசுவின் பக்கம் கொண்டு செல்லவில்லை. பேதுருவின் துக்கம் இயேசுவை மையமாக கொண்டிருந்தது. ஆனால் யூதாசின் துக்கமோ சுயநலமான உலகப்பிரகாரமான துக்கமாக இருந்துள்ளது.

'துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்' என்பது தனது பாவங்களுக்காக துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் என்பதனை இதுவரை விளக்கினேன். அதன் இரண்டாவது விளக்கத்தைப் பார்ப்போம் வாருங்கள்.

## 02. மற்றவர்களின் துன்பத்திற்காக மனம் வருந்தி கர்த்தர் இயேசுவிடம் மன்னிப்பு கேட்பவர்கள் பாக்கியவான்கள்.

பிரியமானவர்களே, நாம் நமது பாவங்களுக்காக துக்கப்படுவது மாத்திரமல்ல, மற்றவர்களின் பாவ நிலையைப்பார்க்கும் போது நிச்சயமாக நமது உள்ளம் உடைக்கப்பட வேண்டும். உலகப் பிரகாரமாக சிந்திப்போமானால் பிறர் தவறு செய்யும் போது நாம் அவர்களை கண்டித்து மன்னிக்க வேண்டும். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லது தான். ஆனால் நாம் உண்மையில் முதலாவது செய்ய வேண்டிய காரியம்: மற்றவர்களின் பாவங்களுக்காக துயரப்பட்டுத் துக்கிக்க வேண்டும்.

**1கொரிந்தியர் 5:1-2 (1.) உங்களுக்குள்ளே விபசாரம் உண்டென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறதே; ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக்கொண்டிருக்கிறானே; அது அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப்படாத விபசாரமாயிருக்கிறதே. 2. இப்படிப்பட்ட காரியஞ்செய்தவனை நீங்கள் உங்களை விட்டு நீக்காமலும் துக்கப்படாமலும், இறுமாப்படைந்திருக்கிறீர்கள்.**

விபச்சார பாவம் குறிப்பிட்ட சபைக்குள் காணப்பட்டது. அதற்காக அவர்கள் ஏன் துக்கப்படவில்லை என பவுல் கேட்கின்றார். மற்றவர்களின் பாவங்களுக்காக மிகவும் வருந்தி அழ வேண்டும். உதாரணமாக சில நாட்களில் தன்னையே கொன்று பெரிய பாவத்தை செய்யப் போகும் நகரத்தைப் பார்த்து இயேசு கண்ணீர்விட்டு அழுதது போல். சிந்தித்துப்பாருங்கள்: கிறிஸ்தவ வாழ்வே Joly tipe என பலரும் சிந்திக்கின்றோம். ஆனால் உண்மை அப்படியல்ல, தெய்வீக வெளிச்சத்தை பின்பற்றுகிறவர்களாகிய நாம் நமது சக விசுவாசிகளின் பாவ வாழ்க்கை, நம்மை சூழவுள்ள பிற மக்களின் பாவ சக்தியான வாழ்வைப் பார்த்தும் கூட நாம் கதறாமல் இருக்க முடியாது.

## யோபுவின் வாழ்வை சிந்தித்துப் பாருங்கள்:

தன் வாழ்வில் இழக்கக்கூடாதது எல்லாவற்றையும் இழந்து மிகவும் வேதனையின் பாதையில் அவர் சென்று கொண்டிருந்தும் அவரை சூழ்ந்து நின்ற அனைத்துமே அவரைக் கைவிட்டது. இந் நிலையில் அவருக்கு ஆறுதல் சொல்ல வந்த மூன்று நபர்களும் ஒரு கட்டத்தில் அவரை தங்கள் வார்த்தைகளால் அதிகமாக காயப்படுத்தினார்கள். அந்த நபர்களைப் பார்த்து கர்த்தர் கோபம் கொண்டார். அவர்களது புத்தியீனத்தைக் குறித்து கர்த்தர் கண்டித்தார். அப்பொழுது அவர்கள் யோபுவிடம் வந்தார்கள். யோபு என்ன செய்தார்? அவர்களின் பாவ நிலையைக் குறித்து யோபுவின் மனநிலை என்ன? பாருங்கள்.

**யோபு 42:9-10 (9.) அப்பொழுது தேமானியனான எலிப்பாசும் சூகியனான பில்தாதும் நாகமாத்தியனான சோப்பாரும் போய், கர்த்தர் தங்களுக்குச் சொன்னபடியே செய்தார்கள்; அப்பொழுது கர்த்தர் யோபின் முகத்தைப் பார்த்தார். 10. யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப்பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்.**

ஆம் அருமையானவர்களே நீங்கள் பிறருக்காக துயரப்படும் போது நீங்கள் பாக்கியவான்கள். அவர் உங்களுக்கு ஆறுதல் கொடுப்பார். அவர் சகல ஆறுதலின் தேவன். அவர் உங்களுக்கு ஆறுதல் செய்வார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாத குணம் கொண்ட வாலிபன் ஒருவன் தன் போதகரிடம் இரட்சிக்கப்படாதவர்கள் பாவத்தின் பாரத்தைச் சுமக்கிறார்கள் என்று நீங்கள் சொல்கின்றீர்கள். ஆனால் நான் ஒன்றும் உணரவில்லை. பாவம் அவ்வளவு பாரமானதா? அதன் நிறை ஒரு 1000Kg அல்லது 2000Kg என்று கிண்டலாகக் கேட்டான். அதற்கு அந்த போதகர் '5000Kg எடையை ஒரு பிணத்தின் மீது வைத்தால் அது தன் மேல் வைக்கப்பட்டுள்ள சுமையை உணருமா?' என்று அந்த வாலிபனிடம் கேட்டார். அதற்கு அந்த இளைஞன் 'அது மரித்துவிட்டபடியினால் எதனையும் அது உணராது' என்று பதில் கொடுத்தான். அப்பொழுது அந்த போதகர் இவ்வாறு சொன்னார்: "நீ உன் ஆவிக்குரிய வாழ்வில் எப்படியிருக்கிறாய்?"

சிந்தித்துப் பாருங்கள்: கல்லூரி ஒன்றில் புதிதாக சேர்ந்த மாணவன் ஒருவன் இருந்தான். ஒரு தடவை தனது அழுக்குத் துணி களை பழைய ஓர் துணியில் சிறிய மூடையாகக் கட்டிக் கொண்டு கல்லூரி விடுதியின் சலவை அறைக்குள் நுழைந்தான். சக மாணவர் களுக்கு முன் தன் ஆடைகள் அழுக்காக இருப்பதனை உணர்ந்து வெட்கப்பட்டான். அப்பொழுது அவன் அந்த மூடையைத் திறக்காமல் அதனை சலவை இயந்திரத்தினுள் தள்ளினான். இயந்திரம் நின்றதும் அந்தக் குவியலை ஓர் உலர்த்திக்குள் தள்ளி, கடைசியாக இன்னும் திறக்கப்படாத மூட்டையைத் தன் அறைக்குள் எடுத்துச் சென்றான். ஆடைகள் ஈரமாகி காய்ந்திருந்தது உண்மை தான். ஆனால் அவை சுத்தமாகாமல் அப்படியே அழுக்காகவே இருந்தது.

**'துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்'**

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

"சுயநலம் தேடாது சுயதேசம் விட்டவள்,
பகலெல்லாம் பணி செய்து சம்பாதித்து தந்தவள்,
என்சொற் தட்டாது நடந்து வந்தவள்,
மகளிலும் அரிதான என் மருமகள்" யார்?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**அனல் 2025 புரட்டாதி - ஐப்பசி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

தாவீது (2சாமுவேல் 12:20)

*சரியான விடை எழுதிய அனைவருக்கும் பாராட்டுக்கள்!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினா விடை - 131

01. 'மிகவும் ருசியான பொருளாயிருந்தாலும், இதை விற்கவோ வாங்கவோ முடியாது' அது என்ன?

02. வெட்டாதமைந்த வழி எது?

03. 'இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது' என்றது யார்?

04. வெறும் சாதாரண மனிதர்களைக் கொண்டு மாபெரும் வெற்றியை சம்பாதித்த இருவர் யார்? யார்?

05. தனக்குத் தானே பேரிட்டது யார்?

06. 'தன் தகப்பனையும் தாயையும் தூஷிக்கிறவன் சபிக்கப்பட்டவன்' என்றது யார்?

07. 'தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம்' என்றது யார்?

08. காணாததை கண்டு நம்பினது யார்?

09. தேவரீர் சொன்னபடியே செய்தருளும் என்றது யார்?

10. 'சத்தியத்தையும் ஞானத்தையும் உபதேசத்தையும் வாங்கு அதை விற்காதே' என்றவர் யார்?

---

# குறுக்கெழுத்துப் போட்டி - 128, வினா விடை - 130

## சரியான விடை எழுதியவர்கள்

**ஆழியவளை**
01. உ.கஜிபன்
02. க.அனுசியா

**கிளிநொச்சி**
03. அ.அனுஜன்

**சங்கானை**
04. ம.டயானி

**காரைநகர்**
05. லோ.வதனி
06. சிவாஜினி

**கனடா**
07. குகன்

**திருநெல்வேலி**
08. ந.செல்வன்

*வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
+குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 128

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

02. அத்தாளியாய் (2இராஜாக்கள் 8:26)
05. பெனாயா (2சாமுவேல் 23:20)
08. யோவாஸ் (2நாளாகமம் 22:12)
10. கலிலேயா (1இராஜா 9:11)
12. ஆகாக் (1சாமுவேல் 15:32)
15. யாபால் (ஆதியாகமம் 4:20)

**வலமிருந்து இடமாக**

01. ரேசோன் (1இராஜாக்கள் 11:24)
07. துஷ்டன் (நீதிமொழிகள் 24:8)
11. காரியசித்தி (ஆதியாகமம் 34:2)
12. ஆசகேல் (2சாமுவேல் 2:18)
13. பாக்கியவான்கள் (சங்கீதம் 84:5)
16. மொர்தெகாய் (எஸ்தர் 10:3)

**மேலிருந்து கீழாக**

03. தாவீது (2சாமுவேல் 3:32)
04. எலியாம் (குழம்பியுள்ளது) (2சாமுவேல் 11:3)
05. பெசலெயேல் (யாத்திராகமம் 31:2–5)

**கீழிருந்து மேலாக**

06. மீகாள் (2சாமுவேல் 6:23)
09. எசேக்கியா (ஏசாயா 38:12)
14. கல்லுகள் (உபாகமம் 8:9)
16. மொர்தெகாய் (எஸ்தர் 9:31)

குறிப்பு: குறுக்கெழுத்துப்போட்டி - *128* இல் ஏற்பட்ட அச்சுத்தவறுக்காக மனம் வருந்துகின்றோம்.

# வினாவிடை 130

## சரியான பதில்கள்

01. யாபேஸ் பட்டணத்தார் – தாவீது (1சாமுவேல் 31:11-13, 2சாமுவேல் 12:15-23)
02. தாவீது, நெகேமியா, தானியேல், கொர்நேலியு, பவுல், எஸ்தர், அன்னாள் (2சாமுவேல் 12:16, சங்கீதம் 35:13, நெகேமியா 1:4, தானியேல் 9:3, அப்போஸ்தர் 10:30, 2கொரிந்தியர் 11:27, எஸ்தர் 4:16, லூக்கா 2:37)
03. நெகேமியா (நெகேமியா 1:4)
04. தாவீதின் வாழ்க்கை (1நாளாகமம் 29:30)
05. சூலமித்தி (உன்னதப்பாட்டு 6:13)
06. அப்போஸ்தலனாகிய பவுல் (அப்போஸ்தலர் 28:3-6)
07. அகிமாசும் – யோனத்தானும் (2சாமுவேல் 17:17-21)
08. துன்மார்க்கனுக்கு முன்பாக தள்ளாடும் நீதிமான் (நீதிமொழிகள் 25:26)
09. யோபு (யோபு 10:18, 13:19)
10. தாவீது (1நாளாகமம் 23:5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்துக் கொள்ளுங்கள்!



❐ திருமதி. V.பிலிப்



பெண்கள் பக்கம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரிகளுக்கு! இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் புதுவருட வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த ஆண்டை நினைத்துப் பார்க்காத அளவில் மிக வேகமாக ஓடி கடந்துள்ளோம். நாட்கள் வேகமாக சுழல்கின்ற போது மணவாளனின் வருகையும் அதி சீக்கிரம் என்பதை காலம் எங்களுக்கு உணர்த்துகிறது. மட்டுமல்ல அவருடைய வருகைக்கான அறிகுறிகளும் தேசத்தில் தென்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

இப்படியான சூழ்நிலையில் பெண்களாகிய எங்களுக்கு வேதமும் சில காரியங்களை நினைவுபடுத்துகிறது.

**லூக்கா 17:32 லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்.**

என்ற ஒரு எச்சரிப்பையும் விடுக்கின்றது. வேதத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட மற்றும் குறிப்பிடப் படாத அனேகம் பெண்கள் இருக்கிறார்கள். முன்னுதாரணமான பெண்கள், அழகிய பெண்கள், கீழ்ப்படிவான பெண்கள், ராஜாங்கத்தைப் பெற்ற பெண்கள், ஏழைப் பெண்கள், விதவைப் பெண்கள் என்று அதன் வகைகளை சொல்லிக் கொண்டே போகக் கூடிய நிலையில் பெண்கள் இருக்கிறார்கள்.

அதிலும் வேதம் தெளிவாக குறிப்பிட்டு சொல்லக் கூடிய இந்தப் பெண் செய்த தவறு தான் என்ன? என்று சிந்தித்து வேதத்தை ஆராய்ந்து பார்த்தால் விளங்கிக் கொள்ள முடியும்.

லோத்து நீதிமான் என்று வேதம் சொல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இந்த நீதிமானின் மனைவியால் நீதிமானுக்குரிய தகுதியோடு வாழத்தெரிய வில்லை. இவள் செய்த இரண்டு பிழையான காரியங்களை ஆராய்ந்து பார்க்க முடியும்.

## 1. உலகத்தின் மீது நம்பிக்கை வைத்தாள்

**ஆதியாகமம் 19:26 அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து, உப்புத்தூண் ஆனாள்.**

'பின்னிட்டு பார்த்து' என்ற வசனம் மூல மொழி பெயர்ப்பான எபிரெய மொழி பெயர்ப் பிலே அவள் "திரும்பிப் போனாள்" என்று அர்த்தம் கொள்கின்றது. அவளால் இந்த உலகத்தின் பாவ சந்தோஷத்தை விட்டுவிட முடியவில்லை, உலகத் தால் மட்டும் தான் தன்னை திருப்திப்படுத்த முடியும் என்று நினைத்தாள். இந்த அநித்தியமான உலகத்திற்காக எதையும் இழக்க தயாராக இருந்தாள்.

**ஆதியாகமம் 19:17 அவர்களை வெளியே கொண்டுபோய் விட்டபின்பு, அவர்: உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்தச் சம பூமியில் எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்.**

'ஓடிப்போ, பின்னிட்டுப்பாராதே, எங்கும் நில்லாதே' என்ற ஆணித்தரமான கட்டளையை ஆண்டவரிடம் இருந்து பெற்றும் கூட, இந்த உலகத்தின் மோகமும் இச்சையும் அவளைவிட வில்லை. என்னுடைய வீடு, என்னுடைய ஆஸ்தி, என்னுடைய சொத்து, என்னுடைய நிலம் என்று இப் பிரபஞ்சத்தின் மீதே ஆசை வைத்தவர்களாக லோத்தின் மனைவியைப் போன்றே அனேக பெண்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள்.

கர்த்தர் மேல் நம்பிக்கை வைக்க மறந்தவர்களாக, தங்கள் நம்பிக்கை முழுவதை யும் மனிதர்கள் மீதும் உலகத் தின் மீதும் வைத்து வாழ்க்கை யில் தொடர் தோல்விகளையே சந்தித்து கொண்டிருக்கிறார் கள்.

உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயம் இருக்கி றது என்று இயேசு சொன் னார். லோத்தின் மனைவி யின் இருதயம் முழுக்க முழுக்க சொத்தின் மீதும், ஆஸ்தியின் மீதும், உடைமை யின் மீதும் இருந்தது. இறுதி யில் அவள் அழிந்து போனாள்.

## 2. கர்த்தருக்கு கீழ்ப்படிய மறுத்தாள்

ஆண்டவருடைய கட்டளையாகிய; **ஆதியாகமம் 19:17 அவர்களை வெளியே கொண்டுபோய் விட்டபின்பு, அவர்: உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்.** என்ற வார்த்தையை லோத் தும் மனைவியும் புறந்தள்ளிய வர்களாக, **ஆதியாகமம் 19:18 அதற்கு லோத்து: அப்படியல்ல ஆண்டவரே**, கர்த்தருக்கே அப்படியல்ல, முடியாது, என்னால் செய்ய இயலாது என்று கீழ்ப்படிய மறுக்கிறார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு **ஆதியாகமம் 19:19b மலைக்கு ஓடிப்போக என்னால் முடியாது; தீங்கு என்னைத் தொடரும், நான் மரித்துப்போவேன்.** அவனுடைய குடும்பத்தை காப்பாற்ற, வாழவைக்க கர்த்தர் விரும்பினார். ஆனால் இங்கே கர்த்தருடைய ஆலோசனையை புறந்தள்ளி வைக்கிறார்கள்.

மலைக்கு ஓடிப்போக என்னால் முடியாது, தீங்கு என்னைத் தொடரும் என்று தங்களை உருவாக்கிய கர்த்தருக்கே ஆலோசனை கொடுக்கிறார்கள். எங்களை உருவாக்கிய வருக்கு எதை தரவேண்டும், எதை தரக்கூடாது என்று தெரியும் அல்லவா? ஆனால் அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை புறந்தள்ளினார் கள். கீழ்ப்படிய மறுத்தார்கள்.

இறுதியில் லோத்து எல்லாவற்றையும் இழந்தவனாக இரண்டு பாவமான சந்ததியை பிறப்பித்தான். நாமும் கர்த்தருக்கும் தேவ மனிதர்களுக்கும், அவருடைய ஆலோசனை களுக்கும் கீழ்ப்படிய மறுக்கின்ற போது பாவத்திலே ஏதோ ஒரு தாக்கத்தை செலுத்தி பாவ சந்ததிகளை பிறப்பித்துக் கொண்டிருக் கிறோம்.

லோத்தும் மனைவியும் லௌகீக கவலைகளினாலும், இச்சைகளினாலும் கர்த்தரை நம்பாமல், கீழ்ப்படியாமல் தங்கள் வாழ்க்கையை தொலைத் தது போல இல்லாமல் கர்த்தர் மீது மாத்திரம் நம்பிக்கை வைத்து கர்த்தரையே பிரியப் படுத்தி அவருக்கு கீழ்ப்படிந்து இந்த ஆண்டு முழுவதும் ஜெயமுள்ளவர்களாக, பின் னிட்டுப் பாராதபடி எங்கள் முழு கவனத்தையும் கர்த்தர் மீது வைத்தவர்களாக ஓடுவோம், ஜெயம் எடுப்போம்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மார்ட்டின் லூத்தர் கிங்

## 1929 - 1968

### சமத்துவம் மலரட்டும்

இனவெறி அமெரிக்கர்களிடையே இணைப் பிரியாமல் இருந்த காலம். கறுப்பு நிறத்தவர்கள் மிகவும் தாழ்ந்தவர்களாகவும், சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டு இழிவானவர்களாகவும் நடத்தப்பட்டனர்.

வெள்ளையர்களுக்கும், கறுப்பர்களுக்கும் தனித்தனி பள்ளிகளும், கல்லூரிகளும் அமைக்கப்பட்டு கல்வி அளிக்கப்பட்டு வந்தது. ஒற்றுமை என்பது கானல் நீராகக்கூடக் காட்சி அளிக்காமல் இருந்தது.

மார்ட்டின் லூத்தர் கிங், புரட்சிகர மனிதனாகப் புதுமைகள் செய்ய புறப்பட்டார். கறுப்பு இனத்தவர்களின் காவலனாக, வெள்ளை இனத்தவர்களுக்கு நண்பனாக, அவர்களிடையே சமத்துவம் ஏற்படவும், பொது நீதி கிடைக்கவும் போராட்டங்களை நடத்தினார்.

60லட்சம் மைல்கள் தூரம் அமெரிக்காவைச் சுற்றி வந்து, 2500 கொள்கை விளக்கப் பொதுக் கூட்டங்களை நடத்தி, பகைவருக்கும் அன்பு செலுத்தும் ஆன்மீக வழியில் பதினொரு ஆண்டுகள் போராடி வெற்றி கண்டார்.

கறுப்பு இன மக்களைத் தட்டி எழுப்பும் கடிதம் ஒன்றை எழுதினார். இது உலகப் புகழ்மிக்க உரிமைக் குரலாக அமைந்தது. உலக நாடுகள் அனைத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்தையும் தன் பக்கம் ஈர்த்தார். சுமார் 2½ இலட்சம் கறுப்பு இனத்தவர்களைக் கூட்டிச் சேர்த்து, தன் கனவுகளை வெளிப்படுத்தினார்.

போராட்டங்கள் வெற்றிப் பெற்றதால் பட்டங்கள் அவரைத் தேடி வந்தன. 1965ஆம் ஆண்டின் சிறந்த மனிதர் என்று டைம்ஸ் பத்திரிகை புகழ்ந்தது. உலக சமாதானத்துக்கான நோபல் பரிசைத் தமது 35ஆம் வயதிலேயே பெற்றார்.

சமத்துவத்தை மலரச் செய்த இவர், நிறவெறி பிடித்த ஒருவனால் கொடூரமாக சுட்டுக்கொல்லப்பட்டார். இம்மாபெரும் விடுதலை வீரர் இறைப்பட்டம் பெற்ற ஓர் பாப்டிஸ்ட் சபையின் போதகர் என்பது குறிப்பிடத்தக்கது.

**அன்பரே! சமத்துவத்தை மலரச் செய்ய என்ன முயற்சி செய்கிறீர்கள்?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: வாழ்க்கையின் மிக முக்கியமான கேள்வி எதுவெனில், நாம் மற்றவர்களுக்காக என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதே. — மார்ட்டின் லூத்தர் கிங்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜனவரி 15**

---

## G.U. போப்
## 1820 - 1908



## *நீங்கள் நினைத்தால் சாதிக்கலாம்*

தமிழ் மண்ணில் வியப்பூட்டும் பணி செய்தவர்களுள் ஒருவர் G.U.போப். அறிவியல் முன்னேற்றங்கள் பெருகிவிட்ட இக்காலத்தில் செய்ய முடியாத மாபெரும் பணிகளைச் செய்தவர் இவர். தமிழின் பெருமையை வளர்த்த தலைசிறந்த அறிஞர்.

ஒரு நாட்டின் மொழியை அறியாமல் அந்த நாட்டில் கிறிஸ்துவின் பணியைத் திறம்படச் செய்ய இயலாது என்பதை உணர்ந்து, இங்கிலாந்து நாட்டிலே தமிழ் மொழியைக் கற்கத் துவங்கினார்.

1839ஆம் ஆண்டு தென்னிந்தியாவிலுள்ள சென்னை வந்தார். பின் திருநெல்வேலியில் சாயர்புரம் என்ற இடத்தை மையமாக வைத்து ஊழியங்களை ஆரம்பித்தார். எபிரெயம், கிரேக்கு, லத்தீன், தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளையும் திறம்படக் கற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டு கிறிஸ்தவ மக்களுக்காக சாயர்புரத்தில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவினார். இவரின் இடைவிடாத உழைப்பால் 96 ஊர்களில் சபைகள் ஏற்பட்டன. ஞானஸ்நானத்திற்காக ஆயிரத்து நூறு மக்கள் தயாராயினர். அக்கம் பக்கத்து கிராமங்களில் பாடசாலைகள் கட்டப்பட்டன.

நாட்டு மக்களுக்கு மாபெரும் பணிகளைச் செய்த போதிலும் பல இன்னல்கள் ஏற்பட்டன. சில ஊர்களில் அவர் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஒருமுறை அவர் பிரசங்கம் செய்து கொண்டிருந்த போது, ஒரு பெண் மாட்டு சாணத்தைக் கரைத்து அவர்மேல் ஊற்றினார். அத்தனை பாடுகளையும் கிறிஸ்துவின் பேரில் உள்ள விசுவாசத்தாலும், மக்கள் அவ்வன்பைக் கண்டு கொள்ளவும் தாங்கிக் கொண்டார்.

தமிழ் மொழியில் ஏராளமான நூல்களை எழுதினார். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். தன் வாழ்நாள் முழுவதும் போதகராகப் பணியாற்றிய இவர் பிப்ரவரி 11ஆம் நாள் தமது 88ஆம் வயதில் விண்ணிற்கு சென்றார்.

**அன்பரே! கிறிஸ்துவுக்குள் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களிடம் உள்ளதா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: நல்லொழுக்கமுள்ளவனே உயர்ந்த நிலைகளில் உயர முடியும் – ஆஸ்வால்டு சேன்டர்ஸ்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" பிப்ரவரி 11**

---

# வேதாகமம்

**என்ன கற்றுக் கொடுக்க வேண்டும் என்று**

**திருச்சபை தீர்மானிப்பதில்லை;**

# சபை

**என்ன கற்றுக் கொடுக்க வேண்டும் என்று**

**வேதாகமம் தீர்மானிக்கிறது...**



– சார்லஸ் ஸ்பர்ஜன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போதகர் ஜோஹணன் டேவிஸ் பிலிப்,
தலைவர்/தலைமைப் போதகர்,
சீயோன் தேவாலயம் – இலங்கை.




## ஜெயத்தின் ஆண்டு 2026

**[கர்த்தர்] அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். சங்கீதம் 37:5**

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிறந்திருக்கும் இப் புதிய ஆண்டில் முதல் அனல் சஞ்சிகை வாயிலாக உங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அத்தோடு அனைத்து வாசகர்களுக்கும் சீயோன் தேவாலயத்தின் சார்பிலும், எனது குடும்பத்தின் சார்பிலும் இனிய புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்திருக்கும் இப் புதிய 2026 ஆவது ஆண்டு உங்கள் அனைவருக்கும் '**ஜெயத்தின் ஆண்டாக**' அமைய வாழ்த்துகின்றேன்.

கடந்த 2025ஆவது ஆண்டில் ஆண்டவருடைய நடத்துதல் அற்புதமாகவும், ஆச்சரியமாகவும் வெளிப்பட்டது. ஆண்டவர் நமக்கு;

**ஏசாயா 43:19**

## இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்.

என்று வாக்குரைத்தது போல் கடந்த 2025ஆவது ஆண்டு எம் அனைவருக்கும் 'வசந்தத்தின் ஆண்டாக' அமைந்தது என்பதனை பலருடைய சாட்சிகளை கேட்கும் போதும் நேரடியாக பாக்கும் போதும் உறுதிப்படுத்தக் கூடியதாக அமைந்தது. ஆண்டவர் ஒருவருக்கே துதி கன மகிமை உண்டாவதாக.

அத்துடன் கடந்த 2025 ஆண்டில் ஆண்டவர் அனேகருடைய வாழ்வில் சாத்தியமற்றவைகளை சாத்தியமாக்கி, அவர்கள் குடும்பங்களில் புதுவரவுகளையும், வசந்தங்களையும், அற்புதங்களையும் காணச் செய்தார். அவர் ஒருவருக்கே மகிமை.

பிறந்திருக்கும் இப் புதிய 2026ஆவது ஆண்டில் ஆண்டவர் நமக்கு கொடுத்திருக்கும் வார்த்தை:

**சங்கீதம் 37:5**
**(கர்த்தர்) அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.**
**Psalms 37:5**
**Trust also in him; and he shall bring it to pass.**

பரிசுத்த வேதாகமத்தில் 37 ஆவது சங்கீதத்தை அவதானிக்கும் போது; 'பல அநீதியுள்ள மக்களின் வாழ்வு ஆசீர்வாதமாகவும், செழுமையுமாகவும் அமைந்து வருவதனை கவனித்து, அச் சூழ்நிலையில் ஆண்டவருடைய நேரத்தில் ஆண்டவரிடமிருந்து, ஆண்டவருடைய பிள்ளைகளின் வாழ்வு ஜெயமாக மலரும் என்பதனை உணர்ந்தவனாக இச் சங்கீதத்தை தாவீது விபரிக்கின்றார்.

இன்று மனிதர்கள் தாங்கள் செய்கின்ற எல்லாக் காரியங்களும் வெற்றியடைய வேண்டும் அல்லது வாய்க்க வேண்டும் அப்போது தான் மிகுந்த மகிழ்ச்சியான வாழ்வு வாழ முடியும் என்று நினைத்து வாழ்கிறார்கள். ஆனால் பல சந்தர்ப்பங்களில் தாங்கள் நினைத்த அல்லது விரும்பிய காரியங்கள், ஆசீர்வாதங்கள், வழிகள் தங்கள் வாழ்வில் தடைபடும் போது, தோல்வியடையும் போது அல்லது நிறைவேறாது போகும்போது மிகுந்த சோர்வடைந்து, ஆண்டவர் மீது ஓர் வெறுப்பையும், ஆலயத்திற்கு செல்லவோ, வேதத்தை வாசித்து — ஜெபிக்கவோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதற்றவர்களாகி பின்மாற்றமான நிலைக்குள் அனேகர் தள்ளப்படுகின் றார்கள்.

சிறுவர்களும், பாடசாலை பிள்ளைகளும்: கல்வியில் மிளிர முடியாமல் தங்கள் விருப்பம் நிறைவேற் றப்பட முடியாத சூழ்நிலைக்கு முகம் கொடுக்கும் போது சோர்ந்து போகி றார்கள். அதே போல வாலிபர்களும் தங்கள் விருப்பங்கள், தேவைகள் நிறை வேறாத போது பெரும்பாடு படுவார்கள். திருமண வாழ்வு தடைபடும் போது சோர்வு ஏற்படுகின்றது. தொழில் செய்ப வர்கள் தங்கள் தொழிலில் விருத்தியோ அல்லது உயர்வுகளோ ஏற்படாமல் அல்லது தடைபடும் போது மனமுறிவடை கின்றார்கள்.

இவ்வாறு வாழ்க்கைப் பாதை யில் பலவிதமான பிரச்சினைகளுக்கும் பலவிதமான காலகட்டங்களுக்கு முகங் கொடுத்து காரியங்களில் ஜெயம் கிடைக்காமல், வாய்க்காமல் போகும் போது போராட்டத்துடனும், கண்ணீருட னும், பயத்துடனும், பின்மாற்றத்துட னும், முயற்சித்தும் பலனளிக்கவில்லை என நினைத்து பின்மாற்றத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்விதமான கலக்கத்துடனும், பிரச்சினைகளுடனும் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கும் அனேகருக்கு அடுத்த பெரிய கேள்வியும், பிரச்சினை யும் என்னவென்றால்; 'ஆண்டவரை அறியாத, கிறிஸ்தவர் அல்லாத மக்கள் கூட்டம் தங்களைவிட சிறப்பாக கல்வி யும், சிறப்பான வேலை, சிறப்பான பதவி நிலைகள், சிறப்பான திருமணம், சிறப்பான சொத்துக்கள்... இப்படி அவர்கள் காரியங்கள் எல்லாமே வாய்க் கின்றது.' ஆனால் ஏன் எனக்கு மட்டும் தான் என்று அவர்களுடன் நமது ஜீவியத்தை ஒப்பிட்டு பார்த்து, மனம் சோர்ந்து கிறிஸ்துவை விட்டு விலகும் சூழ்நிலைக்குள் தள்ளப்படுகின்றார்கள்.

சூரியனின் வெளிச்சத்தையும் வானத்தின் மழையையும் பூமியின் மேல் உள்ள அனைத்து மனிதர்களும் அனுபவிக்கிறார்கள். அதே போன்று தான் ஆசீர்வாதங்களும், செழுமை களும், உயர்வுகளும், ஜெயங்களும் அமைகின்றது. ஆனாலும் தேவ பிள்ளைகள் மிக முக்கியமாக ஒன்றை தெளிவாக புரிய வேண்டியது அவசியம். **அதாவது 'தங்களுடைய வாழ்வில் காரியங்களையும், ஆசீர்வாதங் களையும் நிறைவேற்ற அல்லது வாய்க்கப்பண்ணுவது அது கர்த்தர் மட்டுமே; அவர் அதை தன்னுடைய நேரத்திலேயே செய்வார்.'** இதனா லேயே இந்த சங்கீதத்தில் ஆண்டவர் தன் நேரத்தில் தனக்காக செயலாற்று வார் என்பதனை தாவீது புரிந்து கொண்டார்.

உதாரணமாக ஒரு மாணவன் 35 புள்ளிகளைப் பெற்றால் சித்தியடை யலாம் என்ற நிபந்தனை இருக்கிற போது அந்த மாணவன் தன் மனதிலே சித்தியடைந்துவிடுவேன் என்று நினைத் துக் கொண்டிருந்தால் அவன் சித்திபெற முடியாது. மாறாக அந்த 35 புள்ளி களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பிரயாசத்துடன் படித்தால் மட்டுமே சித்தியைப் பெற்றுக்கொள்வான்.

அதே போன்று என்னுடைய வாழ்வில் எனக்கு ஆண்டவர் கூறிய வாக்குத்தத்தங்கள் நிறைவேற வேண்டும், என்னுடைய வாழ்வில் காரியங்கள் வாய்க்கப்பண்ண வேண்டும் அல்லது ஜெயம் கிடைக்க வேண்டும் என்று வெறுமனே நினைத்துக் கொண்டு மாத்திரம் காலத்தை கடத்திச் செல்ல முடியாது. மாறாக அந்த நிலையை அடைய பிரயாசப்பட்டு அதற்காக கர்த்தர் நியமிக்கின்ற நிபந்தனைகளை பூர்த்தி செய்வதனால் மட்டுமே காரியத்தை வாய்க்கப்பண்ணி கர்த்தர் நமக்கு ஜெயத்தை கொடுக்க முடியும். எனவே இவ் வாக்குத்தத்தம் இவ் 2026ஆம் ஆண்டு நிறைவேறி நமது வாழ்வில் ஜெயத்தின் ஆண்டாக அமையவேண்டுமென்றால் அதற்கான நிபந்தனைகளை இவ் வசனத்தில் காணமுடியும்.

## 1. உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவி

எனவே இன்று எம்மை நாமே கேட்க வேண்டிய மிக முக்கியமான கேள்வி. **'என்னுடைய வழி கர்த்தருக்கு ஒப்புவிக்கப்பட்டதா?'** முன்னேற்றத்தையும், செழிப்பையும், வெற்றியையும் எதிர்பார்க்கின்றோம் என்பது உண்மை. ஆனால் பலவேளைகளில்எமது வழியை கர்த்தருக்கு ஒப்புவிக்க விருப்பமற்றவர்களாகி விடுகின்றோம்.

'வழி' என்பது மிக முக்கியமான தொன்று. வழி என்ற பதம் ஓர் 'வீதியைக்' குறிக்கும். அதே போல 'பாதை' என்றும் பொருள்படும். மேலும் பிரயாணத்தைக் குறிக்கும், அது திசையைக் குறிக்கும், ஓர் மனநிலையைக் குறிக்கும். மேலும் ஓர் பழக்க வழக்கத்தை குறிக்கும், ஒருவருடைய குணநலனைக் குறிக்கும், அத்தோடு ஒரு வகைமுறையை குறிக்கும், அல்லது பாணியைக் குறிக்கும், திட்டத்தைக் குறிக்கும். இவ்விதம் பலவிடயங்களை இவ் 'வழி' என்கிற வார்த்தைக்குள் உள் வாங்க முடியும்.

ஆகவே தேவபிள்ளைகளே ஆண்டவர் நம்மிடத்தில் எதிர்பார்ப்பது என்னவென்றால், எமது வழிகளை அதாவது மேற்குறிப்பிட்ட அனைத்துப் பதங்களும் உள்வாங்கும் காரியங்களையும் நாம் கர்த்தருக்கு ஒப்புவிக்க வேண்டும்.

**ஏசாயா 55:8 என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்.**

இது கர்த்தருடைய வார்த்தை. எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். எங்களுடைய வழிகள், மனநிலைகள், முறைகள், கொள்கைகள், நடவடிக்கைகள், குணநலன்கள், செயல்கள் அனைத்தும் அவருடையவை அல்ல. அது மட்டுமல்ல அது உலகப்பிரகாரமானதும் அல்ல. "அதைவிட மேலான வழியே கர்த்தருடைய வழி." ஆகவே நம்முடைய குறுகிய அல்லது உலகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாரமான அல்லது மனுஷீக வழியை நாம் புறந்தள்ளி அதைக் கைவிட்டு ஆண்டவருடைய மெய்யான, உயர்வான, உன்னதமான, மேன்மையான வழிக்கு நம்மை ஒப்புவித்தால் அவர் அவருடைய நேரத்தில் நம்முடைய காரியத்தை சரியாக வாய்க்கப்பண்ணி ஜெயத்தை தருவார்.

ஆண்டவர் தன்னுடைய தாசனாகிய ஆபிரகாமைக் குறித்து ஓர் சாட்சியை கூறுகின்றார். **ஆதியாகமம் 18:17-19 (17.) அப்பொழுது கர்த்தர்: ஆபிரகாம் பெரிய பலத்த ஜாதியாவதினாலும், அவனுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவதினாலும், 18. நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? 19. கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்.**

இங்கே மிகத் தெளிவாக ஆண்டவர் கூறுகின்றார்: 'எனக்கு ஆபிரகாமை நன்றாகத் தெரியும்.' அவனுக்கு சொன்னதை எல்லாம் நிறைவேற்ற அவன் செய்ய வேண்டியது; **'தான் மட்டுமல்ல, தன் சந்ததியும் கர்த்தருடைய வழியைக் காத்து நடக்க வேண்டும்'** என்று கற்பிக்க கட்டளையிடுகிறார். **இன்று ஆண்டவரை நம்பி வாழும் நாம் மட்டுமல்ல, நமது குடும்பமும், சந்ததியும் கர்த்தர் நமக்காக காரியங்களை வாய்க்கப் பண்ணுவதற்கு நம்முடைய வழியை அவருக்கு ஒப்புவிக்க நம் சந்ததிக்கு கற்றுக் கொடுத்து கட்டளையிட வேண்டும்.**

வேதாகமத்தில் பல சந்தர்ப்பங்களில் ஆண்டவர் தன்னுடைய பிள்ளைகள் தங்கள் இஷ்டத்திற்கும், ஆண்டவருடைய வழியைவிட்டு தங்கள் சுயவிருப்பத்திற்கும் ஏற்ப செயற்படுவதைப் பார்த்து, வேதனைப்பட்டதனை அவதானிக்கலாம். **யாத்திராகமம் 32:8 அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்; அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக் குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்து கொண்டு, அதற்குப் பலியிட்டு: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்று சொன்னார்கள் என்றார்.**

இங்கு மோசேயைக் காணாதபடியினால் ஆரோனும் ஜனங்களும் தங்களுக்கென்று ஆண்டவரை ஆராதிக்க ஒரு வழியை ஏற்படுத்தி தங்கள் இஷ்டத்திற்கு செயற்பட்டு ஆண்டவரை கோபப்படுத்தினார்கள். அதே போல **நியாயாதிபதிகள் 21:25 அந்நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை; அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்துவந்தான்.** இஸ்ரவேலிலே ராஜா அல்லது தலைவன் இல்லாதபடியினால் கீழ்ப்படிவற்ற கூட்டமாக தம் இஷ்டத்திற்கு தேவ ஜனம் செயற்பட்டுக் கொண்டிருந்தபடியால் அவர்களுடைய பரிதபிக்கப்பட்ட நிலையை இவ் வசனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பிக்கிறது. இவ்விதம் பல உதாரணங்கள் மூலம் ஆண்டவர் தன்னுடைய பிள்ளைகள் தங்கள் விருப்பத்திற்கும் இஷ்டத்திற்கும் செயற்பட்டதனை சுட்டிக் காண்பிக்கிறார்.

இந்த 2026ஆவது ஆண்டில் ஆண்டவர் நம்மிடத்தில் என்ன எதிர் பார்க்கிறார் என்றால்; தேவபிள்ளைகளாகிய நாங்கள் நம் இஷ்டத்திற்கும், நம் விருப்பத்திற்கும், நம் மனதின் எண்ணத்திற்கும் ஏற்ப நடக்காமல் ஆண்டவருடைய விருப்பத்திற்கும், அவருடைய சித்தத்திற்கும் நம்மை அர்ப்பணிக்க வேண்டும். அவ்விதம் அவருக்கு நம்மை அர்ப்பணிப்போமாக இருந்தால்; **ஏசாயா 30:21 நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.** இவ் வசனத்தில் கூறியது போல நாம் வழி மாறும் போது எது சரியான வழி என்பதை எமக்கு தெளிவாக ஆண்டவர் காண்பிப்பார்.

அது மட்டுமல்ல **மல்கியா 3:1 இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம்பண்ணுவான்.** என்ற வசனத்தின்படி நமக்கான வழியை நமக்கு முன் சென்று தடைகளை நீக்கி செவ்வைபடுத்தி எல்லாவற்றையும் வாய்க்கப்பண்ணுவார் என்று அவர் வாக்குப்பண்ணுகிறார்.

## 2. அவர் மேல் நம்பிக்கையாயிரு

இவ் 2026ஆவது ஆண்டில் ஆண்டவர் நமக்கு வைத்திருக்கும் ஆசீர்வாதங்கள் எம்முடைய வாழ்வில் நடைபெறவேண்டுமாயிருந்தால் அல்லது காரியங்கள் எமக்கு வாய்க்க வேண்டுமாயிருந்தால் அதற்கு மிக முக்கியம்; 'நாம் நமது நம்பிக்கைகளை அவர் மீது வைக்க வேண்டும்.'

இன்றைக்கும் அனேகர் பல விதமான நம்பிக்கைகளை நிறைந்தவர்களாக காணப்படுகின்றனர். சிலர் தங்களைத் தாங்களே நம்புகிறவர்களாக காணப்படுகின்றனர். வேறு சிலர் மற்றவர்களை நம்புகிறவர்களாக காணப்படுகின்றனர். இன்னும் சிலர் தங்கள் சொத்தை நம்புவார்கள். சிலர் தங்கள் பதவியை நம்புவார்கள். சிலர் தங்களுக்கு இருக்கும் அதிகாரங்களை நம்புவார்கள். இன்னும் சிலர் தங்கள் பணத்தை நம்புவார்கள். இவ் விதம் பல நம்பிக்கைகள் நம்மை சூழ நமக்கு முன்பாக காணப்பட முடியும்.

ஆனால் இந்த 2026ஆம் ஆண்டில் ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளாகிய எங்களிடம் எதிர் பார்ப்பது என்னவென்றால்; எம்மைச் சூழ காணப்படுகின்ற இந்த எல்லா விதமான நம்பிக்கைகளையும் பிடுங்கியெடுத்து, 'முழு நம்பிக்கையையும் கர்த்தர் மீது மட்டும் வைக்க வேண்டும்' என்பதனை எதிர்பார்க்கின்றார்.

**11இராஜாக்கள் 18:1-8 (1.) இஸ்ரவேலின் ராஜாவாகிய ஏலாவின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குமாரன் ஓசெயாவின் மூன்றாம் வருஷத்திலே ஆகாஸ் என்னும் யூதாவுடைய ராஜாவின் குமாரனாகிய எசேக்கியா ராஜாவானான். 2. அவன் ராஜாவாகிற போது, இருபத்தைந்து வயதாயிருந்து, எருசலேமிலே இருபத்தொன்பது வருஷம் அரசாண்டான்; சகரியாவின் குமாரத்தியாகிய அவன் தாயின்பேர் ஆபி. 3. அவன் தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். 4. அவன் மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத்தோப்புகளை வெட்டி, மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப்போட்டான்; அந் நாட்கள் மட்டும் இஸ்ரவேல் புத்திரர் அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள்; அதற்கு நிகுஸ்தான் என்று பேரிட்டான். 5. அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல்ஒருவனும்இருந்ததில்லை. 6. அவன் கர்த்தரை விட்டுப் பின்வாங்காமல் அவரைச் சார்ந்திருந்து, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தான். 7. ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார்; அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு அனுகூலமாயிற்று; அவன் அசீரியா ராஜாவைச் சேவிக்காமல், அவன் அதிகாரத்தைத் தள்ளிவிட்டான். 8. அவன் பெலிஸ்தரைக் காசாமட்டும் அதின் எல்லைகள் பரியந்தமும், காவலாளர் காக்கிற கோபுரங்கள் தொடங்கி அரணான நகரங்கள் பரியந்தமும் முறிய அடித்தான்.**

அந் நாட்களில் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை நம்பாமல், கர்த்தர் காண்பித்த வழிகளையெல்லாம் விட்டு விட்டு பல நம்பிக்கைகள் மீது தங்களுடைய வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்த நாட்களில் தான் எசேக்கியா ராஜா ராஜ்ஜியபாரம் பண்ணிய காலத்தைக் குறித்து மேற்குறிப்பிட்ட சம்பவத்தில் மிகத்தெளிவாக நாம் அவதானிக்கின்றோம். அவனுடைய தலைமையில் இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரையும் அவர்களைச் சூழ அவர்கள் வைத்திருந்த நம்பிக்கைகள் எல்லாவற்றையும் **11இராஜாக்கள் 18:5 அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப் போல் ஒருவனும் இருந்ததில்லை.** இவ் வசனத்தின்படி கர்த்தர் மீது மட்டும் நம்பிக்கை வைத்தபடியால் அவனுக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் எல்லாவற்றையும் வாய்க்கப்பண்ணும்படி அனுகூலம் பண்ணியதை; **11இராஜாக்கள் 18:7 ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார்; அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு அனுகூலமாயிற்று; அவன் அசீரியா ராஜாவைச் சேவிக்காமல், அவன் அதிகாரத்தைத் தள்ளிவிட்டான்.** அசீரியாவின் தலைநகரம் நினிவே. இந்த ஜனங்கள் பாவத்தால் நிறைந்து கொடூரமானவர்கள், தங்களையும் தங்கள் புயபலத்தையும் நம்புவார்கள். இப்படி உலகத்தையும் நம்பி, கர்த்தரையும் நம்புகிற கூட்டம் அனேகர் இருக்கிறார்கள். ஆனால் எசேக்கியா கர்த்தரை மாத்திரம் தான் நம்பிக்கையாக கொண்டு சொல்கிறார்: **11நாளாகமம் 32:7 நீங்கள் திடன்கொண்டு தைரியமாயிருங்கள்; அசீரியா ராஜாவுக்கும் அவனோடிருக்கிற ஏராளமான கூட்டத்திற்கும் பயப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படாமலும் கலங்காமலுமிருங்கள்; அவனோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்.**

இந்த இஸ்ரவேல் ஜனங்களைப் போல ஆண்டவரை அறிந்த நாங்கள் கடந்த காலங்கள், வருடங்களிலே எங்களுடைய நம்பிக்கைகளை எம்மை சூழ இருக்கின்ற பல சூழ்நிலை களின் மீது வைத்திருந்திருக்கலாம். ஆனால் இந்த புதிய வருடத்தில் புதிய தீர்மான மாக அந்த எல்லா நம்பிக்கைகளையும் பிடுங்கியெறிந்து ஆண்டவர் மீது வைப் போமாக இருந்தால் **'அவரே நமக்கு காரியத்தை வாய்க்கப்பண்ணி அனுகூலமாய் வெளிப்படுவார்.'**

தாவீதினுடைய வாழ்வை அவதானித்தால் அவனை மேற்கொள்ள மட்டுமல்ல அவனை விழுத்த அனேக திட்டங்கள் தீட்டப்பட்டது. ஆனாலும் ஆண்டவர் தாவீதை அவனுடைய எல்லா சத்துருக்களின் கைக்கும் விடுவித்து சவுலின் கைக்கும் விடுவித்து அவனுக்கு வெற்றியை அளித்து அவனுடைய காரியத்தை வாய்க்கப்பண்ணி அவனுக்கு கர்த்தர் கூறிய வாக்குத்தத் தத்தை நிறைவேற்றிய போது அவன் கர்த்தருக்கு முன்பாக துதித்து பாடியதை; **11சாமுவேல் 22:31 தேவனுடைய வழி உத்தமமானது; கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது; தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார்.** வசனத்தில் அவதானிக்கலாம்.

**ஆகவே தேவ பிள்ளைகளே, ஆண்டவருடைய வழி என்பது அது உத்தமமானது, வித்தியாசமானது, மேன்மையானது. அவ்வாறு அவருடைய வழியை பின்பற்றி கர்த்தர் மேல் நம்பிக்கை கொண்டால் அவர் நமக்காக செயலாற்றுவார்.**

**சங்கீதம் 37:5 உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.** இவ் வசனத்தில் 'கர்த்தரை நம்பு' என்று வெறுமனே கூறாமல், – நம்பிக்கையாயிரு – என்ற பதத்தில் "இரு" என்பது முக்கியமான வார்த்தை. இது காத்திருப்பதைக் கூறுகின்றது. 'கர்த்தர் தன்னுடைய நேரத்திலே செயலாற்றுகிறவர் என்பதால் அவருடைய நேரத்திற்காக காத்திருப்பது நமது கடமை.'

கர்த்தரை தெய்வமாக கொண்ட ஒரு விவசாயி தன்னிடம் இருந்து ஒரு துண்டு நிலப்பரப்பில் நெல்லை விதைத்தார். அது வளர்ந்து கதிராகி, பயிராகி நல்ல பலனைத் தரும், தன்னு டைய எதிர்காலம் நன்றாக செழித் தோங்கும் என்று கனவு கண்டிருந்த நேரத்தில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அந்த விவசாயியின் வயல் நிலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. சகல நம்பிக்கையும் இழந்தவராகி நம்பிக்கை அனைத்தும் சுக்கு நூறாக உடைந்தவராக சில நாட்கள் கழித்து தன்னுடைய வயல் நிலத்தை பார்க்கச் சென்றார். என்ன ஆச்சரியம்! அங்கே அவர் விதைத்த பயிர்கள் எல்லாம் செழித்து வளர்ந் திருப்பதைக் கண்டார். என்ன அதிசயம், சாத்தியமற்றதை சாத்தியமாக்குபவர் அல்லவா நம் தேவன். அவரை நம்பி காரியங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கிற போது காரியங்களை வாய்க்கப்பண்ண எப்பேர்ப்பட்ட சூழ்நிலையிலும் அவர் கூட இருந்து ஜெயத்தை தர வல்லவர் என்பதனை அவன் புரிந்து ஆண்டவரை மகிமைப்படுத்தினான்.

எனவே இப் புதிய ஆண்டில் எங்கள் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து, கர்த்தர் மேல் நம்பிக்கையாக அவருடைய காலத்திற்காக காத்திருப்பது நம்முடைய கடமை: அவ்வாறென்றால் 'காரியத்தை வாய்க்கப்பண்ணுவது அவருடைய வேலை'. ஆகவே நமது வாழ்வில் பாவம், சாபம், ஆண்டவருக்கு பிரியமில்லாத காரியங்கள், எமது விருப்பங்கள், எமது இஷ்டத்திற்கு செயற்படுவது, எமது வழியில் நடந்து ஆண்டவரை நம்பாது, நம்பிக்கைகளை சூழ்நிலைகள் மீது நம்பிக்கை வைத்து வாழ்வோமாக இருந்தால் ஒரு போதும் கர்த்தர் நமக்காக செயலாற்றவோ, ஆசீர்வதிக்கவோ, காரியத்தை வாய்க்கப் பண்ணவோ முடியாது. சில வேளை களிலே இவ்விதம் வாழ்கின்ற போது ஆசீர்வாதங்கள் கிடைக்க முடியும், அற்புதங்கள் கூட நடைபெற முடியும். அதையெல்லாம் கர்த்தரால் கைகூடி வந்தவைகள் அல்லவே.

நமது வாழ்வில் எது நிகழ்ந்தாலும் கர்த்தரால் வாய்க்கப்பண்ணப் பட்டதாய் அல்லது கைகூடி வந்ததாய் அமையவேண்டுமாயிருந்தால் ஆண்டவருடைய எதிர்பார்ப்பின்படி எமது வழியை அவரிடத்தில் ஒப்புவித்து அவரை நம்பி வாழ்வோம்; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணி இவ் 2026 ஆண்டை ஜெயத்தின் ஆண்டாக நமக்கு மாற்றித்தர வல்லமையுள்ளவராக இருக்கின்றார்.

**'தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக'**

# படித்ததில் சில...

**வா**ழ்க்கை நிச்சயமற்றதாக உணரும் போது, தாவீதை நினைவில் கொள்ளுங்கள். ஒரு இளம் மேய்ப்பன், ஒரு கவண் மற்றும் தேவன் மீது கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையுடன் ஒரு ராட்சதனை எதிர்கொண்டான். அவன் கவசம், தன்னுடைய பெலன் அல்லது மனித அங்கீகாரத்தை நம்பியிருக்கவில்லை. அவனுடைய நம்பிக்கை கர்த்தரில் வேரூன்றியது. அந்த நம்பிக்கை வெற்றியைக் கொண்டு வந்தது. அதே போல், தேவன் மீது முழுமையாக நம்பிக்கை வைப்பவர்களை அவர் ஆசீர்வதிக்கிறார். தேவனை நம்புவது என்பது நாம் சவால்களை எதிர்கொள்ள மாட்டோம் என்று அர்த்தமல்ல, ஆனால் நாம் அவற்றை தனியாக எதிர்கொள்ளமாட்டோம் என்பதை இது உறுதி செய்கிறது.

அன்பானவர்களே, நீங்கள் பயத்தைவிட விசுவாசத்தை தெரிந்தெடுக்கும் போது தேவன் உங்கள் பலவீனத்தை பலமாகவும், உங்கள் யுத்தங்களை (போராட்டங்களை) சாட்சிகளாகவும் (சரித்திரமாகவும்) மாற்றுகிறார். அவரை நம்புங்கள் - உங்களுக்கான வெற்றி வந்துகொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❐ போதகர் வேதநாயகம் மகாராஜா

# ரோமர் நிருபம்

## ஓர் சுருக்க விளக்கம்

**பா**வத்தினாலே வந்த வீழ்ச்சியை சென்ற இதழில் பார்த்தோம். இப்போது பாவத்தினாலே வந்த விளைவைப் பார்க்கும் போது...

- தேவனின் கோபாக்கினை வானத்தில் இருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது
- அவர்கள் பைத்தியக்காரரானார்கள்.
- தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.
- தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்.
- ஆணோடே ஆண் அவலட்சணமாய் நடப்பித்தார்கள்.
- அவர்கள் சரீர ரீதியில் தாக்கப்பட்டார்கள்.
- தகாதவைகளைச் செய்யும்படி தேவன் அவர்களை கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்.

புறஜாதியாருக்கு பொதுவான வெளிப்பாட்டின் மூலம் தேவன் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் போது அவர்கள் அதைக் கொண்டு விஷேட வெளிப்பாட்டைக் கண்டு கொண்டிருக்க வேண்டும். அவர்கள் அதிலே தவறியதால் பாவத்தின் வீழ்ச்சியையும், பாவத்தின் விளைவையும் பெற்றுக் கொண்டனர். ஒரு தெய்வக் கொள்கையில் இருந்து பல தெய்வக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையை உருவாக்கினர். ஆனால் இன்று என்ன சொல்கிறார்களென்றால், பல தெய்வக் கோட்பாட்டில் இருந்து இப்போது ஒரு தெய்வக் கோட்பாட்டை உருவாக்குகிறார்களென. இது எதனைக் காட்டுகிறது; மனிதன் தொடர்ந்து வீழ்ந்து கொண்டே இருக்கின்றான்.

தேவன் யாரையும் பலவந்தம் பண்ணுவதில்லை. பாவம் செய்பவனைத் தேவன் உணர்த்துவார். இது பாவம் என்பதனைக் காண்பிப்பார். ஆனால் தடுக்கமாட்டார். அதே போல எந்த மனிதனையும் எக் காரணத்திற்காகவும் பாவம் செய்யும்படி தேவன் தூண்டவும் மாட்டார்.

இவர்கள் விரும்பி பாவத்தைச் செய்கிறபடியால் இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். (ரோமர் 1:25-26) இயற்கைக்கு மாறாக நடந்து கொள்ளுகிறார்கள். இவர்கள் தாங்கள் செய்ததை அறிந்திருந்தார்கள். இது தேவனுக்கு விரோதமான நிலை. ஏனெனில் தேவன் தீர்மானித்திருக்கும் நீதியான தீர்மானத்தை அறிந்திருந்தார்கள். தேவனை அறியாத மக்களாக இருந்தாலும் இது அறியாமல் செய்த பாவமல்ல; இது அறிந்து செய்த பாவம்...

---




*அன்பின் வாசகர்களே!*

*இப் புதிய ஆண்டிலும் அனல் சாந்தா விபரங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. எனவே அவை தொடர்பான விபரங்களை பார்வையிட்டு உங்கள் சாந்தாக்களை புதுப்பித்து பிரதிகளை சிரமமின்றி பெற்றுக் கொள்ளுங்கள். மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். - ஆசிரியர் -*

## ஜெயத்தின் ஆண்டு 2026

**[கர்த்தர்] அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். சங்கீதம் 37:5**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறைக்க முடியாத தவறு!

**வேதப்பகுதி: 1இராஜாக்கள் 21:17-24**

நாபோத் என்பவனிடம் ஒரு நல்ல திராட்சை தோட்டம் இருந்தது. அதனை ஆகாப் என்ற ராஜா தனக்கு சொந்தமாக்க விரும்பினான். அவன் தர மறுத்தான். எனவே ஆகாப் ராஜாவின் மனைவி ஆகாபுக்கு தவறான ஆலோசனை கொடுத்தாள். எனவே ஆகாப் அவனை தந்திரமாக கொலை செய்து விட்டான். அது யாருக்கும் தெரியாது என்று சந்தோஷமாயிருந்தான். ஆனால் கர்த்தர் அதனைப் பார்த்தார்.

எனவே எலியா என்ற தம்முடைய ஊழியனை ஆகாபிடம் அனுப்பினார். எலியாவைக் கண்ட ஆகாப் பயந்து நடுங்கினான். ஏனென்றால் தான் செய்த தவறு வெளியே தெரிந்து விட்டதை அவன் அறிந்தான்.

ஆம்! நாம் யாருக்கும் தெரியாமலே தவறு செய்ய முடியும். ஆனால் கர்த்தருக்குத் தெரியாமல் செய்ய முடியாது. மனிதர்கள் பார்க்காவிட்டாலும் அவர் பார்த்து தண்டிப்பார்.

**சிந்தனைக்கு:-**

**கர்த்தர் எங்கும் இருக்கிறார். அவர் நம்மை கவனிக்கின்றார். எனவே கர்த்தருக்கு அஞ்சி தவறு செய்யாமல் வாழவேண்டும்.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள் - மார்ச் 13

## அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

**Subscription (Per Year S.L. Rs)**

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 600.00 |
| இந்தியா (India) | 2000.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 3000.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 2100.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 2100.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 2100.00 |

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:..........................................

முகவரி:.......................................

..................................................

..................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*Wish You a*
**Happy New**
*Year...*

**இனிய**
**புத்தாண்டு**
**நல்வாழ்த்துக்கள்**
**2026**

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org